Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 19 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 30 (02.06.2003) திங்கட்கிழமை இதழ்: 241

INTERNET BROWSING

உங்கள் கனவுகளை நனவாக்கும் விதத்தில் (Global Informatics) நிறுவனத்தின் மிகக்குறைந்த கட்டணத்தில் 1 hour - 50/= உங்கள் இணையத்தளத் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளமுடியும் என்பதை அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

gi@netcafe

Internet Browsing Center

Global Informatics (pte) Ltd.

379, Kasthuriyar Road, Jaffna.

வருட - 077 7364247இ 021 222 5735-6

(சி-1032)

## வல்வையில் படைமுகாம் அமைப்பு இரவு பகலாகத் தொடர்கின்றது!

### எதிர்த்து மறியற் போராட்டம் இன்று நடக்கிறது

(வடமராட்சி)

வல்வெட்டித்துறைப் பகுதியில் மக்கள் குடியிருப்பை அண்டிய பகுதிகளில், இராணுவ முகாம் அமைக்கும் நடவடிக்கை இரவு பகலாக மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இன்று மறியற்போராட்டம் நடைபெறவுள்ளது.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரிக்கு அண்மையிலுள்ள கடற்கரைப் பகுதியில் இராணுவ முகாமொன்றை அமைப்பதற்கான நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் பகுதியில் படைமுகாம் அமைப்பது, இயல்பு வாழ்க்கையை பாதிக்கும் என்பதால் படைமுகாம் அமைக்கும் பணிக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அப்பகுதி கடற்தொழிலாளர் சங்கங்கள் அனைத்தும் இணைந்து எதிர்ப்புப் போராட்டம் ஒன்றினை இன்று நடத்தவுள்ளன. இப்பகுதி கடற்தொழிலாளர்கள் இன்று தொழிலுக்குச் செல்லாது, இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

அதேவேளை - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவா ஜிலிங்கம், இந்தப்படை முகாம் அமைக்கும் நடவடிக்கைகளை நேரில் (10ஆம் பக்கம் பார்க்க)



வல்வெட்டித்துறையில் இராணுவ முகாம் அமைக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# புலிகளுக்கான பதில் கடிதம் அரசு நேற்றிரவு அனுப்பியது!

## பல சுற்றுக் கலந்தாய்வின் பின் நடவடிக்கை

(கொழும்பு)

**இடைக்கால நிர்வாக அமைப்புக்கான அரசின் மாற்று யோசனையை விடுதலைப் புலிகள் நிராகரித்ததைத் தொடர்ந்து - அரசின், பதில் கடிதமொன்று நேற்றிரவு புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. நோர்வேத் தூதரகம் ஊடாக நேற்றிரவு 11 மணியளவில் இந்தக் கடிதம் - கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நடுவப் பணிமனைக்கு அனுப்பப்பட்டதாக, பிரதமருக்கு மிக நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.**

**கடந்த மூன்று தினங்களாக கொழும்பில் நடைபெற்ற பல சுற்றுக் கலந்தாய்வுகளின் பின்னரே இக்கடிதம் அனுப்பிவைக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.**

வட-கிழக்கில் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ளக்கூடிய இடைக்கால நிர்வாக அமைப்புத் தவிர்ந்த மாற்றுயோசனை குறித்து ஆராய - அமைச்சர்கள், அதிகாரிகள் மட்டத்திலான விசேட கூட்டம் ஒன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

பிரதமரின் அலுவலகத்தில் நடைபெற்ற இவ்விசேட கூட்டத்தில், வட-கிழக்கில் செயற்படக்கூடிய வகையான புதிய கட்டமைப்புக் குறித்து பல கோணங்களில் ஆராயப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைப் பங்கேற்க வைக்க தொடர்ந்து முயற்சி எடுங்கள்!

### ரணிலிடம் - ஜப்பான், நோர்வே வலியுறுத்து

(கொழும்பு)

உதவி வழங்கும் நாடுகளின் ரோக்கியோ மாநாடு தொடர்பாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நோர்வே மற்றும் ஜப்பானியத் தூதுவர்கள் பேச்சு நடத்தியுள்ளனர்.

தனித்தனியாக நடைபெற்ற இச்சந்திப்புக்களின் போது, ரோக்கியோ மாநாட்டின் முக்கியத்துவம் குறித்து ஆராயப்பட்டதுடன், விடுதலைப் புலிகளை இம்மாநாட்டில் பங்குபற்ற வைப்பதற்கு அரசு தொடர்ந்து முயற்சி எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

உதவி வழங்கும் நாடுகளின் ரோக்கியோ மாநாட்டுக்கான திகதி மிகமிக நெருங்கிக்கொண்டிருப்பதால், அவசர அவசரமாக பிரதமருடனான இச்சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## ஜப்பானிலிருந்து திரும்பிய மிலிந்த பிரதமருடன் கலந்தாலோசனை!

(கொழும்பு)

உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கான ஏற்பாடுகளை கவனிப்பதற்காக ரோக்கியோ சென்றிருந்த அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று நாடு திரும்பினார்.

இவர், உடனடியாகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ரோக்கியோ மாநாடு தொடர்பாக நீண்ட நேரம் உரையாடினார்.

மேற்படி மாநாட்டில், விடுதலைப் புலிகள் பங்குபற்றுவதற்குத் தடையாகவுள்ள காரணங்களை அகற்றுவதற்கு அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து, பல ஆலோசனைகளை அமைச் (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் தடுப்பதற்கு இந்தியா கடும் முயற்சி

### நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்துப் பேச்சு

(கொழும்பு)

வட - கிழக்கின் இடைக்கால நிர்வாகத்தை முழுமையாக விடுதலைப் புலிகளிடம் வழங்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு, இந்திய அரசு முயற்சி செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் கொடுப்பதைத் தடுக்க, இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலான பல்வேறு நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொண்டு வருகிறது. அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமாகவும், நேரடியாகவும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கைகளில் இந்திய அரசு ஈடுபட்டுவருகிறது.

மலையக மக்கள் முன்னணியின நாடாளுமன்ற உறுப்பினர் ராதாகிருஷ்ணனை இந்தியத் தூதரகத்திற்கு அழைத்து, மேற்படி விடயங்கள் குறித்து தூதரக அதிகாரிகள் எடுத்துரைத்துள்ளனர். விடுதலைப் புலிகளிடம் முழுமையாக இடைக்கால நிர்வாகத்தை வழங்குவது நியாயமற்றது என்றும், அனைத்துத் தமிழ் அரசியற்கட்சிகளையும் இணைத்தே இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க தூதரக அதிகாரிகளின் இன்றைய யாழ்.விஜயம் திடீர் ரத்து!

யாழ்ப்பாணத்திற்கு இன்று வருகை தரவிருந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக உயர் அதிகாரிகள் தமது பயணத்தை ஒத்திவைத்துள்ளனர்.

இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் - அரசியல், பொருளாதார அபிவிருத்திக்கு பொறுப்பான மூன்று உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவினரே இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவிருந்தனர்.

இவர்கள், இங்கு வந்து இரண்டு நாட்கள் தங்கியிருந்து யாழ்ப்பாண நிலைமைகளைப் பார்வையிடவிருந்ததுடன், இங்குள்ள அரச உயர் அதிகாரிகளையும் சந்தித்து - பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயவிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## கூட்டமைப்பு எம்பிக்களை பிரதமர் இன்று சந்திப்பார்!

அரசாங்கத்தின் யோசனைகளை விடுதலைப் புலிகள் நிராகரித்ததையடுத்து எழுந்துள்ள அரசியல் நெருக்கடி நிலைமைகள் குறித்து ஆராய, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களை கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைத்துள்ளார்.

இதற்குமுன் - அவர், நேற்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தனுடன் நீண்ட நேரம் பேசினார். இதற்காக சம்பந்தன் நேற்று திருகோணமலையிலிருந்து அவசர அவசரமாக ஹெலி மூலம் கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation

எக்ஸ்போ

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891 071 349999

071 348888 074 - 512666 - 01 - 360290

(சி -975)

# குமார் கொலை இரகசியங்களை வெளியிட முன்வந்ததாலேயே சமன் கொல்லப்பட்டார்!



குமார் பொன்னம்பலம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற கொலைகளுடன் தொடர்புடைய, மொரட்டுவ சமன் கொல்லப்பட்டதற்கு - இக்கொலைகள் தொடர்பான விபரங்களை அவர் வெளியிட முன்வந்ததே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து, மேலும் தெரிய வருவதாவது -

மொரட்டுவ சமன் இறப்பதற்கு முன்னர் தனக்கு மரண அச்சுறுத்தல ஏற்பட்டிருப்பது பற்றி பிரபல கிரிமினல் சட்டத்தரணியிடம் தெரிவித்துள்ளார்.

பொ.ஐ.மு. காலத்து அரசியல் கொலைகள் பற்றியும் - அதில் சம்பந்தப்பட்டோர் குறித்தும் தகவல்களை வெளியிட முன்வந்ததே மொரட்டுவ சமன் கொல்லப்பட்டமைக்குக் காரணம் என்று நம்பப்படுகிறது.

ஒரு மாதத்துக்கு முன்னர் மொரட்டுவ சமன், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு தொலைபேசி வழியே மூன்றாவது நபர் ஒருவர் மூலம் தொடர்பு கொண்டார். இதன்போது, தான் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை நேரில் சந்திக்க விரும்புவதாகவும் தெரிவித்திருந்தார்.

ஆனால், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தான் சமனுடன் பேச விரும்பவில்லை என்றும், குடும்ப நண்பரான சட்டத்தரணி தயா பெரேராவுடன் தொடர்புகொண்டு பேசலாம் எனவும், தெரிவித்தார்.

இதன் பின்னர், மூன்றாம் தரப்பு நபர் ஊடாகவே, கஜேந்திரகுமாருடன் சமன் தொலைபேசியில் உரையாடினார்.

இதன்போது, குமார் பொன்னம்பலத்தின் படுகொலை தொடர்பான முழுவிபரத்தையும், தமக்கு தெரிவிக்கும்படி - கஜேந்திரகுமார் மூன்றாவது நபர் மூலம் சமனிடம் கேட்டார். கொலைக்கு யார் காரணமாக இருந்தார்கள்? யார் கொலைக்கு உத்தரவிட்டது என்றும் அவர் கேட்டார்.

இதற்கு மூன்றாவது நபர் மூலம் பதிலளித்த சமன்,

கடந்த அரசாங்கத்தில் உயர் பீடத்தில் இருந்த ஒருவரே - குமார் பொன்னம்பலத்தைக் கொலை செய்யுமாறு உத்தரவிட்டதாகக் கூறினார்.

இதையடுத்து - கொலை நடந்து மூன்று வருடங்களாகியும், இது தொடர்பான எந்த தகவலும் வெளியிடவில்லை என்றும், யார் இந்தக் கொலை தொடர்பான தகல்களை மறைத்து வைக்க உத்தரவிட்டதென்றும் கஜேந்திரகுமார் கேட்டார்.

இதற்கு மூன்றாவது நபர் மூலம் பதிலளித்த சமன், தனக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் பாதுகாப்பு உறுதி வழங்கப்பட்டிருப்பதாகவும், தற்போது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதால், இக்கொலைகள் தொடர்பான தகவல்களை வெளியிட முன்வந்துள்ளதாகவும், தெரிவித்தார். அத்துடன், தான் ஆபத்தான கட்டத்தில் இருபபதாகவும், எவ்வேளையும் கொல்லப்படலாம் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் நேரில் முழுவிபரத்தையும் வெளியிட விரும்புவதாகவும், குறிப்பிட்டார்.

ஆனால், கஜேந்திரகுமார் - தான் நேரில் சமனைச் சந்திக்க விரும்பவில்லை என்றும், அவர் தனது தந்தையைக் கொன்றவர் என்றும், குறிப்பிட்டதோடு - சட்டத்தரணி தயா பெரேராவிடம் தான் பேச வேண்டும் எனவும், குறிப்பிட்டார்.

இதையடுத்து, சமன் - சட்டத்தரணி தயா பெரேராவுடன் தொடர்பு கொண்டு தனக்காக வழக்கில் வாதிடும்படி கேட்டுக்கொண்டார்.



மொரட்டுவ சமன்

ஆனால், தயா பெரேரா - நண்பரைக் கொலை செய்த உனக்காக இந்த வழக்கில் வாதிடமுடியாதெனக் கூறியதோடு, குமார் பொன்னம்பலம் கொலை தொடர்பான முழுவிபரங்களையும் வெளியிட்டால் ஏனைய வழக்குகளில் வாதிடத் தயாராக இருப்பதாகக் கூறினார்.



அனுருத்த ரத்வத்த

அத்துடன், குமார் பொன்னம்பலம் கொலைக்கு அனுருத்த ரத்வத்தவின் குடும்பத்தினர் யாராவது உத்தரவிட்டனரா என, சட்டத்தரணி தயா பெரேரா கேட்டார்.

அதற்கு மொரட்டுவ சமனிடமிருந்து பதில் வரவில்லை. முழுவிபரத்தையும் தான் நேரில் கூறுவதாகத் தெரிவித்தார்.

ஆனால், மூன்று வாரங்களாக அவரைக் காணவில்லை. மூன்று வாரங்கள் கழிந்து, கடந்த மே 18 ஆம் திகதி வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோது, மொரட்டுவ சமன் சுட்டுக்கொல்லப்பட்டார்.

முன்னரும் இவரைக் கொல்ல, மலபேயில் வைத்து முயற்சிக்கப்பட்டது. இவரைக் கொல்லவதற்கு, தொழில் ரீதியான கொலைகாரர்கள் அமர்த்தப்பட்டதாகவும் கூறப்பட்டுகிறது.

## சண்டிலிப்பாயில் சுயதொழிற் பயிற்சி

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில், மனிதவள அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கட்டுமான தொழிற் பயிற்சி, மரவேலைப் பயிற்சி நெறிகள இம்மாதம் முதல் ஆரம்பமாகவுள்ளது.

18 வயதுக்கு மேற்பட்ட, இப்பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் இத்துறைசார்ந்த இளைஞர்கள் - இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சிநெறியினைப் பயில்பவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக மாதாந்தம் 1000 ரூபா வழங்கப்படும் என்றும், 4 மாத காலப் பயிற்சி முடிந்தவுடன் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும், இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள இப் பகுதி இளைஞர்கள் முன்வர வேண்டும் என்றும், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத் திட்டமிடற் பணிப்பாளர் மு.பாலசிங்கம் தெரிவித்தார்.

## பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின், 2002 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற இறுதிப் பரீட்சை முடிவுகள் வெளியாகின.

ஆரம்பக்கல்வி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், நூலக விஞ்ஞானம், நடனம், சங்கீதம், சித்திரம் ஆகிய துறைகளில் மாணவர்கள் கடந்த வருடம் இறுதிப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இவர்கள் தற்போது உள்ளகப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். பரீட்சை முடிவுகளைக் கல்லூரியின் விளம்பரப் பலகையில் பார்வையிட முடியுமெனப் பீடாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது.

## விபத்தில் இருவர் காயம்

எதிரெதிரே வந்த இரு மோட்டார் சைககிள்கள் நேருக்குநேர் மோதியதில், இருவர் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று மாலை தர்மபுரத்தில் நடைபெற்ற இவ்விபத்தில், விசுவமடுவைச் சேர்ந்த இராமநாதன் குணரத்தினம், வினாசித்தம்பி மனோகரன் ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

## வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள்

# தேனிலவை அனுபவிக்க இலங்கையை நாடுகின்றனர்!

தேனிலவை அனுபவிப்போருக்கான, முதன்மையான சுற்றுலாத்தலமாக இலங்கையே கருதப்படுவதாக- பிரிட்டனில் இருந்து வெளியாகும் 'Times - Travel Section' என்ற சஞ்சிகை தெரிவித்துள்ளது.

தேனிலவுக்காகச் செல்லும் உல்லாசப் பயணிகள், இலங்கையையே முதலில் தெரிவு செய்கின்றனர். அத்துடன், பறவைகளை அவதானிக்கும் நிலையங்கள் இங்கு திறமையாகச் செயற்படுவதாகவும், இதனால் பிரபலமான சுற்றுலா முகவர்கள் இலங்கை மீது அதிக ஆர்வம் காட்டுவதாகவும் அச்சஞ்சிகை மேலும் தெரிவித்துள்ளது.

நீண்ட காலங்களுக்குப் பின்னர் இலங்கை மீது சுற்றுலாப் பயணிகள் அதிக கவனம் செலுத்துவதாக அச்சஞ்சிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

## அரசாங்க யோசனை நிராகரிக்கப்பட்டதையடுத்து

# முப்படைத் தளபதிகளுடன் ரணில் பாதுகாப்பு நிலை குறித்து ஆராய்வு!

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட, இடைக்கால நிர்வாகத்திற்கான மாற்று யோசனையைப் புலிகள் நிராகரித்துள்ளதையடுத்து, ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து முப்படைத்தளபதிகளுடனும், பாதுகாப்பு அமைச்சு உயரதிகாரிகளுடனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆராய்ந்துள்ளார்.

பிரதமரின் யோசனை நிராகரிக்கப்பட்டதையடுத்து, இடம்பெற்ற இந்த அவசரக் கூட்டத்தில் - பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் மெரில் குணதிலக மற்றும் முப்படைகளின் பிரதம தளபதிகள் ஆகியோர் பங்குபற்றினர்.

இச்சந்திப்பில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் - விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதென்ற முடிவில் உறுதியாக இருப்பதாகத் தெரிவித்தார்.

இதேவேளை - இக்கூட்டத்தில் கருத்து வெளியிட்ட பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, ரோக்கியோ மாநாட்டில் புலிகள் எப்படியும் பங்குபற்றுவார்கள் என்று தான் உறுதியாக நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், இந்தச் சூழலில் படையினர் குழப்பம் விளைவிக்காமல், எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் தற்போதைய பாதுகாப்பு நிலைவரம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. இதன்போது, கருத்து வெளியிட்ட கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி - கடற்படையினர் ரோந்து நடவடிக்கைகளின் போதும், வடக்கு-கிழக்கில் நடவடிக்கைகளில் ஈடுபடும் போதும் ஏற்படும் பிரச்சினைகள் குறித்தும், விரிவாக எடுத்துக் கூறினார்.

50 குதிரை வலுவுக்கும் அதிகமான சக்தி கொண்ட வெளியிணைப்பு இயந்திரங்களைப் பயன்படுத்த, வர்த்தமானி மூலம் அனுமதி வழங்கப்பட்டிருப்பது குறித்து அவர் அதிருப்தி வெளியிட்டார். இதனால், புலிகளின் படகுகள் கடற்படையினரிடமிருந்து தப்பித்துக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பண்ணாகம் மோதலில் ஈடுபட்ட நால்வருக்கும் விளக்கமறியல்

பண்ணாகத்தில் கடந்தவாரம் இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில், சம்பந்தப்பட்ட நான்கு பேரையும் விளக்கமறியலில் வைக்க, மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த மாதம் 21 ஆம் திகதி பண்ணாகத்தைச் சேர்ந்த இளைஞரொருவர், வீதியால் சென்ற யுவதிகளை நோக்கித் தகாத வார்த்தைப் பிரயோகம் செய்ததையடுத்து, அப்பகுதியில் இருபகுதியினருக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியது. இம் முறுகல் முற்றிய நிலையில் அப்பகுதியில், இரு பகுதியினருக்கிடையில் மோதல் வெடித்தது.

இச்சம்பவம் தொடர்பாக மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் பொலிஸாரால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. இதைத்தொடர்ந்து மோதலில் சம்பந்தப்பட்ட நால்வரையும், எதிர்வரும் 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# புலிகள் கோரிக்கையை கவனமெடுத்து ஆராயுங்கள்

## அரசிடம் மேற்குநாட்டுத் தூதரக அதிகாரிகள்

(கொழும்பு)

உதவிவழங்கும் நாடுகளின் ரோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் நிச்சயமாகப் பங்குபற்ற வேண்டும் என்றும், இலங்கை அரசு- விடுதலைப் புலிகளின் கோரிக்கையை கவனத்திலெடுத்து ஆராய வேண்டும் என்றும், அமெரிக்க நோர்வே மற்றும் பிரிட்டிஷ் தூதரகங்களின் உயரதிகாரிகள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி மாநாடு மிகவும் பயன் மிக்கதாக இருக்கப்போவதாகவும், எனவே இம்மாநாட்டில் - அரசும், விடுதலைப் புலிகளும் பங்குபற்றுவது மிகவும் அவசியம் என்றும் மேற்படி தூதரக அதிகாரிகள் கேட்டுள்ளனர். (200)

# வவுனியாவிலுள்ள குளத்தில் இனந்தெரியாத சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியாப் பகுதியில் குளம் ஒன்றில் உருக்குலைந்த நிலையில் இளைஞன் ஒருவருடைய சடலம் ஒன்று பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை வவுனியாப் பகுதி குளமொன்றில், இளைஞன் ஒருவரின் சடலம் இருப்பதாகப் பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து, அப்பகுதிக்குச் சென்ற பொலிஸாரினால் சடலம் மீட்கப்பட்டு, வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நீலநிற நீட்டுக்காற்சட்டையும், பச்சைநிற ரீ சேர்ட்டுடனும் சடலம் காணப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இந்தச்சடலத்திற்குரியவர் ஒரு வாரகாலத்திற்கு முன்பே இறந்திருக்கலாமெனத் தெரியவருகின்றது.

மேற்படி சடலம் அடையாளம் காணும் பொருட்டு, வவுனியா வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (03)






# வவுனியா, கம்பஹா, மாத்தறையில் சித்திரவதைகள் அதிகமெனத் தகவல்

இலங்கையில் - சித்திரவதைகள் அதிகமாக இடம்பெற்றுவரும் இடங்களாக, வவுனியா, அம்பாறை, மாத்தறை ஆகிய பிரதேசங்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் இனங்காணப்பட்டுள்ளன.

இவ்வாறு இனங்காணப்பட்ட இடங்களில் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலய உதவியுடன், ஒருவருடகால செயற்திட்டமும் நான்கு மாதங்களுக்கு ஒருதடவை சித்திரவதைகள் தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (87)

தேங்காய் எண்ணெய் பாவிப்பதால்

# இருதய நோய் ஏற்படும் என்பது இதுவரை நிரூபிக்கப்படவில்லை!

## மருத்துவ நிபுணர் தெரிவிப்பு

தேங்காய் எண்ணெய் பாவிப்பதால் இருதய நோய் ஏற்படும் என்பது, மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்படவில்லை என்று - பிரபல இருதய சிகிச்சை நிபுணர் பி.பி.அத்துக்கோரள தெரிவித்தார்.

தெங்கு அபிவிருத்தி அதிகார சபை - அண்மையில் கொழும்பில் ஏற்பாடுசெய்திருந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தேங்காய் எண்ணெயில் கொலஸ்ரோல் அதிகமாக இருப்பதாகவும், அதனால், இருதயநோய் ஏற்படுகிறதென்றும் கூறப்படுகின்றபோதிலும் இது ஆய்வுபூர்வமாக நிரூபிக்கப்படவில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# படையினர் தங்கியுள்ள பொதுக் கட்டடங்களின் விபரங்களைத் திரட்டுகிறது கண்காணிப்புக்குழு!

(கொழும்பு)

அரச படையினர் தங்கியுள்ள பொதுக் கட்டடங்கள் மற்றும் ஆலயங்கள் தொடர்பான விபரங்களை, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு திரட்டிவருவதாக, கண்காணிப்புககுழுவின் பிரதித் தலைவர் ஹொக்லண்ட் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கத்தின் கோரிக்கைக்கு இணங்கவே, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு நடுநிலையான அறிக்கையொன்றைத் தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இதற்கான மதிப்பீட்டுப் பணிகள் தற்போது முடிவுறும் கட்டத்தில் இருக்கின்றன. அடுத்த வார இறுதியில், இந்தப் புள்ளிவிபர அறிக்கை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பிவைக்கப்படும்.

இதேவேளை, படையினர் தங்கியுள்ள பொதுக்கட்டடங்கள் மற்றும் ஆலயங்கள் தொடர்பான விபரங்களைத் தமக்கு அனுப்பிவைக்குமாறு, விடுதலைப் புலிகளிடமும் கேட்கப்பட்டுள்ளது.

புலிகளால் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கடற்படைச் சிப்பாயை விடுவிக்கக்கோரி - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கடிதம் அனுப்பியுள்ளது. ஆனால், புலிகளிடமிருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என்றும் ஹொக்லண்ட் மேலும் தெரிவித்தார்.

# சல்மோன் மீன்களை உண்பவர்கள் இப்போது 'பிஸி'யாகி விட்டார்கள்

## நோர்வே மீது மங்கள சமரவீர சாடல்



'சல்மோன் மீன்களை உண்ணும் நாட்டவர்கள் இப்போது உலகில் மிகவும் 'பிஸி'யானவர்களாகிவிட்டனர்' - என்று நோர்வே மீது சாடியுள்ளார், பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர.

நோர்வேப் பிரதமர் பொன்டவிக் - ஜனாதிபதி சந்திரிகா குறித்து வெளியிட்ட கருத்துத் தொடர்பாக, செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பொன்டவிக் - நடுநிலையாளர் என்ற உணர்வின்றி இலங்கை பற்றிப் பேசியுள்ளார். சல்மோன் மீன்களை உண்பவர்களிடம் இருந்து இதைவிட வேறெதை எதிர்பார்க்க முடியும்?

இலங்கையைப் பற்றி இப்படிக் கருத்துக்கூற நோர்வே நாட்டவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை.

இலங்கை அரசு நெகிழ்ச்சிப்போக்கைக் கடைப்பிடிக்கவேண்டும் என்ற நோர்வே பிரதமரின் கூற்றைப் பொதுஜன ஐக்கியமுன்னணி கடுமையாக எதிர்க்கின்றது.

இலங்கை அமைதி முயற்சியில் நோர்வே அரசு வகித்துவந்த பாத்திரம் வெளுத்துவிட்டது. இவர்களின் நடுநிலைமைத்தன்மை அகன்று, ஒரு தரப்பினர் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# கையடக்கத் தொலைபேசிகளுக்கு உள்வரும் அழைப்புகள் இலவசம்!

## விரைவில் நடைமுறைக்கு வருகிறது

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகளுக்கான உள்வரும் அழைப்புக் கட்டணங்களை முற்றிலும் இலவசமாக்குவதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துவருவதாக, தகவல் தொடர்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கையடக்கத் தொலைபேசிகளுக்கு உள்வரும் அழைப்புக் கட்டணம் அறவிடுவதை நீக்குவது குறித்து, தீவிரமான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தனியார் தொலைபேசி நிறுவனங்களுடன் இதற்கான பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன.

உள்வரும் அழைப்புக் கட்டணங்களை நீக்குவதன் மூலம், நாட்டிலுள்ள சுமார் 3 லட்சம் தொலைபேசிப் பாவனையாளர்கள் நன்மையடைவர்.

இச்சலுகையை வழங்குவதற்கான தீர்மானத்தை, தகவல் தொடர்பு சாதன அமைச்சு எடுத்துள்ளது. அத்துடன், தொலைத்தொடர்பு மறுசீராக்கல் ஆணைக்குழுவுடன் - அமைச்சு அதிகாரிகள் பேச்சுக்களை நடத்தி, இது தொடர்பான சட்டவரைபுகளைத் தயாரிக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றது.

உள்வரும் அழைப்புகளுக்கான கட்டணங்களுக்கு விலக்களிக்கும் திட்டத்திற்கு, நிரந்தர இணைப்பு வழங்கும் தொலைபேசி நிறுவனங்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# வேறு திணைக்களங்களும் ஜனாதிபதியிடம் செல்லும்?

சுங்கத் திணைக்களம், நூதனசாலை, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆகிய மூன்று நிறுவனங்களையும் தனது அதிகாரத்தின் கீழ் கொண்டுவருவதற்கு, ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துவருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் திணைக்களங்களின் ஊழியர் தொழிற்சங்கங்களிலிருந்து, தமக்கு விருப்பமானவர்களை அழைத்து ஜனாதிபதி கலந்துரையாடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றதுபோல், இந்தத் திணைக்களங்களும் பொறுபேற்கப்படலாம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

## விபத்தில் நால்வர் பலி

அக்கரைப்பற்று - பொத்துவில் வீதியில் நடைபெற்ற வீதி விபத்தில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் மரணமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற கணவன், மனைவி, இரு பிள்ளைகள் ஆகியோரே மரணமடைந்தவர்களாவர். இவர்களுடைய மோட்டார் சைக்கிள், பஸ் ஒன்றுடன் மோதிக் கொண்டபோதே இவ்விபத்து இடம்பெற்றது.

# தன்னை பெண்ணாகப் பிரகடனம் செய்த பதுளையிலுள்ள ஆண் வைத்திய நிபுணர்!



பதுளை பொது வைத்தியசாலையில், கண் வைத்திய நிபுணராக உள்ள டாக்டர் சுபாஸ் தேவிந்த சமரசிங்க தன்னைப் பெண்ணாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

30 வயதான இவர், பிறப்பின்போது ஆணாகவே கருதப்பட்டார். இதன்படியே, இவரது பிறப்புப் பதிவுகளும் செய்யப்பட்டன. கொழும்பு டி.எஸ்.சேனநாயக்க ஆண்கள் கல்லூரியிலேயே இவர் கல்வி கற்றார். மருத்துவப் படிப்பின்போதும் இவர், தன்னை ஆண் என்றே பதிவு செய்திருந்தார்.

ஆனால், மருத்துவப் படிப்பை முடித்த பின்னர், தான் பெண்ணாக மாறியுள்ளதாக டாக்டர் சுபாஸ் தேவிந்த சமரசிங்க கூறுகிறார். இது தொடர்பாக இவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

உயிரியல் ரீதியாக ஆண், பெண் என்றே குழந்தைகள் வகைப்படுத்தப்படுகின்றன. ஆனால் - ஆண், பெண் தவிர்ந்த இன்னொரு வகையினரும் உள்ளனர். இது கருப்பையில் குழந்தை இருக்கும்போது, ஹோர்மோன்களால் ஏற்படும் தாக்கத்தினால் உருவாகின்றது.

இந்த வகையிலேயே, தனது பிறப்பும் அமைந்திருப்பதாக டாக்டர் சுபாஸ் தெரிவித்ததுடன், தனது பெயரை சுபாஷினி தேமிந்தி என மாற்றுமாறு - தனக்குத் தெரிந்தவர்கள் ஆலோசனை கூறுவதாகவும் குறிப்பிட்டார்.

# அரசியல் வன்செயலில் ஈடுபடும் மாணவருக்கு மகாபொல கொடுப்பனவு இடைநிறுத்தப்படும்!

## கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அறிவிப்பு

அரசியல் வன்செயல்களில் ஈடுபடும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு, 'மகாபொல' புலமைப்பரிசுக் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது என்று, கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற 'மகாபொல' புலமைப் பரிசு வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு, உரையாற்றியபோதே, அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

அரசியல் வன்செயல்களில் ஈடுபட்டதற்காக, ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 128 மாணவர்களுக்கான 'மகாபொல'க் கொடுப்பனவு இ[illegible]ள்ளது.

இது[illegible]

24 ஆ[illegible]

[illegible]



தொல்புரம் மத்திய சனசமூக நிலைய சக்தி முன்பள்ளியின் வருடாந்[illegible] விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றபோது - முன்பள்ளி சிறார்க[illegible] சத்தியப்பிரமாணம் செய்வதைப் படத்தில் காணலாம். (118[illegible]

# வெலிகந்த பகுதியில் ஊர்காவலர் சுட்டுக்கொலை

வெலிகந்த பகுதியில், ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவர் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி உயிரிழந்தார். இச்சம்பவம் கடந்த வியாழன் இடம்பெற்றது.

வெலிகந்தையில் இருந்து வடமேற்குத் திசையில் 10 கிலோமீற்றர் தொலைவிலுள்ள முத்துக்கல் என்ற இடத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

இ[illegible]த்து மேலும் தெரியவரு[illegible]

[illegible]ர்ந்த வி.

[illegible]டைய

[illegible] கடமைக்காகப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று கொண்டிருந்தபோதே இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

கடந்த வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற சம்பவத்தில் ஊர்காவற்படைவீரர் அந்த இடத்திலேயே பலியானதாகத் தெரியவருகிறது.

இவரிடமிருந்த ரி.56 ரகத் துப்பாக்கி மற்றும் அதற்குரிய 30 ரவைகள் என்பனவும் அபகரிக்கப்பட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# [illegible]வி.பி. கூட்டணிக்கு [illegible]ரிகாவே தலைவி!

[illegible] ஜே.வி.பியும் இணைந்து உருவாக்கும் [illegible]பதி சந்திரிகா குமாரதுங்கவை நியமிக்[illegible]தெரியவருகின்றது.

[illegible]க, ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச [illegible]னுரா பண்டாரநாயக்கவையும் நியமிப்[illegible]

[illegible] - இருகட்சிப் பிரமுகர்கள் மத்தியில் [illegible]தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, [illegible]ட்டால், அதுவே பொதுஜன ஐக்கிய [illegible]க்கும் என்று - பொதுநிர்வாக, மாகாண [illegible] வஜிர அபேரட்ண தெரிவித்தார்.

### வைரஸ் காய்ச்சல் பரவும் ஆபத்து

# மொறட்டுவ பல்கலைக்கழகத்தை ஒரு வாரம் மூடிவிட நடவடிக்கை

வைரஸ் காய்ச்சல் பரவும் ஆபத்து ஏற்பட்டதையடுத்து, மொறடடுவ பல்கலைக்கழகம் மூடப்பட்டிருப்பதாகப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அறிவித்துள்ளார்.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 40 மாணவர்களுக்கு, இனந்தெரியாத வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டதையடுத்தே கடந்த வெள்ளிக்கிழமை முதல் பல்கலைக்கழகத்தை மூடுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் பாதித்த பகுதிகளில் இருந்து வந்த மாணவர்களும், வெள்ளப் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் உதவி நிவாரணப் பணிகளுக்குச் சென்ற மாணவர்களுமே வைரஸ் காய்ச்சல் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றனர்.

வைரஸ் காய்ச்சல் நோய் மேலும் பரவலாம் என்ற அச்சம் காரணமாகவே பல்கலைக்கழகத்தை மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விடுதிகளிலிருந்த மாணவர்களும் வீடுகளுக்குச் செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

எனினும் - மொறட்டுவ பல்கலைக்கழகத்தை எதிர்வரும் 8 ஆம் திகதி மீளத்திறப்பதென பல்கலைக்கழக நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரைகள் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றபோதும், நிர்வாகப் பணிகள் தொடர்ந்தும் இடம் பெற்றுவருவதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை, மொறட்டுவப் பகுதி மக்கள் வைரஸ் காய்ச்சல் குறித்து அச்சமடைந்து இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கடைக்குச் சென்றவர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

### சாவகச்சேரிப் பகுதியில் சம்பவம்

(சாவகச்சேரி)

வீட்டிலிருந்து இரவுநேரம் கடைக்குச் சென்ற ஒருவர் இனந்தெரியாதோரின் தாக்குலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார். இச்சம்பவம சாவகச்சேரிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது -

சாவகச்சேரி சிவன்கோவிலடியைச் சேர்ந்த மாணிக்கவாசகர் சிவகுமார் (வயது 28) என்பவர் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் கடைக்குச் சென்றபோது, இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு உள்ளானார்.

தடிகள் மற்றும் கம்பிகளால் தாக்கப்பட்ட இவர் - தலையிலும், பிற இடங்களிலும் பலத்த காயங்களுக்கு உள்ளாகி - சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (121)

## ஏப்ரல் மாதத்தில் மட்டும் 2,744 வெடிபொருட்கள் மீட்பு!

தமிழர் புனர்வாழ்வுக்கழக மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினால் கடந்த ஏப்ரல் மாதத்தில் மட்டும் 2,744 வெடிபொருட்கள் அகறறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் குடியிருப்புக்களை அண்டிய பகுதிகளிலும், பொது இடங்களிலும் இராணுவத்தினரால் புதைக்கப்பட்ட வெடி பொருட்களே அகற்றப்பட்டன.

39 ஆயிரத்து 262 சதுர மீற்றர் நிலப்பரப்பிலிருந்து இந்த வெடி பொருட்கள் அகற்றப்பட்டன. இவற்றில் 821 துருப்பு எதிர்ப்புக் கண்ணி வெடிகளும், 1,923 மிதிவெடிகளும் அடங்குகின்றன. (122)

# ஜனாதிபதி சந்திரிகாவுக்கு புதிய பாதுகாப்பு ஆலோசகர்

### சந்திரானந்த் டி சில்வா நியமிக்கப்படுவார்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாரும், முன்னாள் தேர்தல் ஆணையாளருமான சந்திரானந்த டி சில்வா - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்படவுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் இவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பதவி வகித்தார். ஜனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்படவுள்ள இவரது நியமனம் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு இந்த வாரம் வெளியிடப்படும் எனத் தெரியவருகிறது.

### மருத்துவ மாதுக்கள் இன்மையால் கர்ப்பிணிகள் பாதிப்பு

(ஆழியவளை)

குடும்பநல மருத்துவ மாதுகள் இல்லாமையினால் மருதங்கேணிப் பிரதேசத்திலுள்ள கர்ப்பிணித் தாய்மார்களும், பாலூட்டும் தாய்மார்களும் ஆரம்ப சுகாதார வசதியைப் பெறமுடியாத நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2000 ஆம் ஆண்டின் முன் இப்பிரதேசத்தில் 5 குடும்பநல மருத்துவ மாதுகள் சேவை செய்து வந்தனர். தற்போது மருதங்கேணி வைத்தியசாலைக்கு மாத்திரம் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் இங்கு சேவையாற்றிய அனைத்துக் குடும்பநல மருத்துவ மாதுகளையும் இப்பிரதேசத்திற்கு இடமாற்றம் செய்யுமாறு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர், யாழ்.மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (122)

### சடலம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி - கரந்தன் பகுதியில் வெட்டிக்கொல்லப்பட்ட ஆறுமுகம் சிவபாதம் என்பவரது சடலம், பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையை யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி மேற்கொண்டார். கோப்பாய் பொலிஸார், இக்கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரா)




## சின்னஞ்சிறு செய்திகள்

### பரீட்சை முடிவுகள் இன்றே வெளியாகும்

கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்படுவதாக இருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி கலைப்பிரிவு பகுதி 1 இன் பரீட்சை 'முடிவுகள் - இன்றைய தினம்' பி.ப.3 மணிக்கு வெளியிடப்படவுள்ளது

மீள் பரீட்சார்த்திகள் எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிக்குமாறும், யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பிரிவுப் பதிவாளர் கேட்டுள்ளார். (58)

### வடமராட்சி கிழக்கில் கண்நோய் பரவுகிறது

வடமராட்சி கிழக்கில் கண் நோய வேகமாகப் பரவிவருவதால், பெருமளவு நோயாளர்கள் சிகிச்சைக்காக திலீபன் மருத்துவமனைக்கும், சாவகச்சேரி வைத்தியசாலைக்கும் சிகிச்சைக்காகச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளிலிருந்து, தினமும் 50 இற்கு மேற்பட்ட நோயாளர்கள் கண் சிகிச்சைக்காக இந்த வைத்தியசாலைகளுக்கு வருவதாகத் தெரியவருகின்றது. (17)

### வெடி வைத்து மீன்பிடித்தோர் கைது

திருமலை - சம்பூர் கடறபகுதியில் ஜெலிக்னைட் வெடிமருந்தை உபயோகித்து மீன்பிடித்துக்கொண்டிருந்த ஆறு பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகின்றது.

### சுகாதாரச் சீர்கேடுகளை நீக்க நிதி ஒதுக்கீடு

பளைப் பகுதியில் நிலவும் சுகாதாரச் சீர்கேடுகளை சீர்செய்வதற்காக, ஒரு மில்லியன் ரூபா நிதியினை கிளிநொச்சி பிரதேச செயலகம் ஒதுக்கியுள்ளது. இதன் மூலம் பளைப் பகுதியில் நிலவும் ஆரம்ப சுகாதாரப் பிரச்சினைகள் நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (115)

### பீடாதிபதி நாடு திரும்பினார்

கல்விச் சுற்றுலா ஒன்றினை மேற கொண்டு கனடா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் சென்றிருந்த யாழ்ப்பாணம் தேசியக் கல்வியற் கல்லூரிப் பீடாதிபதி கலாநிதி த.கமலநாதன் நாடு திரும்பியுள்ளார்.

இக் கல்விச் சுற்றுலாவின்போது, கனடா 'போர்க்' பல்கலைக்கழகத்தின் கல்விசார் கருத்தரங்குகள், செயலமர்வுகள் என்பனவற்றில் இவர் கலந்துகொண்டதோடு, கனடா பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள் ஆகியவற்றினையும் பார்வையிட்டார். (சு)

### வருடாந்த மஹோற்சவம்

அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் - நாளை மறுநாள் புதன்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (72)

### பிரதேச செயலக புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

தனியார் வீடொன்றில் இயங்கிக் கொண்டிருக்கும் பளைப் பிரதேச செயலகத்தைச் சொந்த இடத்தில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரம், யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்திருக்கும் பிரதேச செயலகத்தைப் புனரமைப்பதற்காக, 17.8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலர் புத்திரசிகாமணி தெரிவித்துள்ளார். (115)

### [illegible]ழிவு மதிப்பீடு சேகரிப்பு

[illegible]ண்மையில் வீசிய புயற்காற்றி[illegible] வாழைகளுக்கு ஏற்பட்ட இழப்[illegible]ள் தொடர்பான விபரங்களை, [illegible] சுவேலி தெற்கு விவசாய சம்[illegible]ளனம் திரட்டி வருகின்றது.

[illegible] சம்மேளன எல்லைக்குட்பட்ட [illegible]வசாயிகளின் வாழைகளுக்கு ஏற்[illegible]ட்ட இழப்புக்கள் தொடர்பான விப[illegible]ங்களைத் திரட்டித் தருமாறு - புத்[illegible]ார் கமநல சேவை நிலைய வெ[illegible]ிக்கள அலுவலர் விடுத்த கோரிக்[illegible]கைக்கு அமையவே இந்த விபரங்[illegible]ள் திரட்டப்பட்டு வருகின்றன.(128)

### கடற்படைப் படகைக் காணவில்லை

மூன்று கடற்படையினருடன் கடற்படையின் கண்ணாடியிழைப் படகு ஒன்று கடந்த புதனன்று பருத்தித்துறைக் கடலில் காணாமற்போயுள்ளது. இயந்திரத் துப்பாக்கி பூட்டப்பட்ட இப்படகு, மணறகாட்டிலிருந்து பருத்தித்துறை நோக்கி வந்து கொண்டிருந்தபோது காணாமற்போனதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையும், விமானப்படையும் இப்படகைத் தேடி வருகின்றன.

### பொங்கல் விழா

காரைநகர் - மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவிருப்பதாக, ஆலய பிரதமகுரு அறிவித்துள்ளார். (52)

### முன்பள்ளி விளையாட்டு விழா

காரைநகர் அம்பாள் முன்பள்ளியுடன், தங்கோடை முன்பள்ளியும் இணைந்து நடத்தும் வருடாந்த விளையாட்டு நிகழ்வு எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நா.குகநேசன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

### மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(கொக்குவில் மேற்கு)

யுனிசெப் நிறுவன அனுசரணையுடன் சர்வோதயம் நடத்தும் மிதிவெடி அபாயம் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு, நாளை பி.ப. 4 மணிக்கு நாவற்குழி சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில், நாவற்குழி பிரதேச பொதுமக்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட சர்வோதய அமைப்பினர் கேட்டுள்ளனர். (108)

### பாடசாலைகளிடையே விவாத அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையத்தினால் - பெண்கள் உரிமை தினத்தையொட்டி - குடாநாடு முழுவதும் நடாத்தப்பட்டுவரும், பல்வேறு நிகழ்வுகளில் ஒரு கட்டமாக தீவக வலயப் பாடசாலைகளில் விவாத அரங்குகள் நடத்தப்படவிருக்கின்றன.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய வித்தியாலத்திற்கும், கரம்பன் சிறிய புஷ்ப மகளிர் கல்லூரிக்கும் இடையிலான விவாத அரங்கு - எதிர்வரும் 9 ஆம் திகதி பிற்பகல் 1 மணிக்கு கரம்பன் சிறிய புஷ்ப மகளிர் கல்லூரியில் இடம் பெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (52)

### பளை வைத்தியசாலையில் சிரமதானம்

பளை அரசினர் வைத்தியசாலை வளாகம் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது. வைத்தியசாலை அபிவிருத்தி சபையுடன், கிராம மக்களும் இணைந்து இச்சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (36)

### மண்வெட்டியால் தாக்கப்பட்டு காயம்

வயலுக்கு நீர் பாய்ச்சுவதில் ஏற்பட்ட தகராறில், மண்வெட்டியால் தாக்கப்பட்ட ஒருவர் மயக்கமுற்ற நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

உருத்திரபுரம், குஞ்சுப்பரந்தனைச் சேர்ந்த சண்முகசுந்தரம் பிரபாகரன் (வயது 20) என்பவரே மண்வெட்டியால் தாக்கப்பட்டுக் காயமுற்றவராவார். இவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைததியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (121)

### நீர்வேலியிலும் பாதீனியம்

(நீர்வேலி)

நீர்வேலி கந்தசுவாமி கோவிலை அண்டிய பகுதிகளிலும், நீர்வேலி பிரதேசசபை தலைமையகப் பகுதியிலும் பெருமளவில் பாதீனியம் களைகள் பரவியுள்ளன. இக்களைகளை அழிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால், மேலும் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. (77)



# பகுதி - 02
# காடுகள் கருகின்றன

அ.இரவி

எளிமையினதும், சாந்தத்தினதும், அகிம்சையினதும் சின்னமாக அவர் திகழ்ந்தார். பெனியன் தெரியத்தக்கதாக ரெர்லின் சேர்ட்டை உள்ளேவிட்டு சாரக்கட்டின் மேல் பேர்ஸ் வைத்து அகலப் பாம்புத் தோல் பெல்ற்றைப் பெரேரா கட்டியிருந்தார். தென்னந்தோப்பில் அழகே உருவாய், பின்னேரச் சூரியனின் மஞ்சளில் செம்மைபடர இருந்த நந்தா, தன் தோப்பில் புடுங்கிய இருபெரும் இளநீரை மார்பில் வைத்து கம்பாயத்துக் கட்டியிருந்தாள்.

அத்தனையும் அழகாய் இருந்தன, அத்தனையும் எளிமையாய் இருந்தன, அத்தனையும் சரியாய் இருந்தன. நீர்ப்பாம்பு என நினைத்து நாகபாம்பில் கால் வைப்பமோ என அச்சம் இருந்தது உண்மை. கபரக்கொய்யா என நிணைத்து முதலையை மிதிப்பமோ என அச்சம் இருந்ததும் உண்மை. வேறெதற்குப் பயம்?

தான் மிதித்தது நீர்ப்பாம்பு அல்ல நாகம்தான் எனும் அச்சம் அம்மாவிற்கு வந்தது. கபரக்கொய்யா என்று பிள்ளையை வெருட்டியதுதான். ஆனால், அது முதலை. அம்மாவிற்கு அச்சம் இன்னும் பீடித்தது. பிக்கு சாது சாது என்று பற்றைக்குள் அனுப்பிய நாகபாம்புகள் எல்லாம் படம் எடுத்துத் திரண்டு வந்தன. அம்மா நல்லாய்ப் பயந்தா. அப்பாவிற்கு அச்சம் இருந்தது. ஆனால் வெளிக்காட்டவில்லை. அம்மா இன்னும் அஞ்சுவா.

அக்காவிற்கு அச்சம் தெரியா வயது. அக்காவைப் பெபேரரா அழைத் துப்போய் இனிப்பு வாங்கிக் குடுத்து, உருகிக் குழம்பாய் கொதித்துக்கொண்டிருக்கும் தார்ப் பீப்பாவில் போட்டாலும் அக்கா சிரிப்பா. அது கொதித்தார் என்று அக்காவிற்கு உறைக்க முன்னம், அக்கா உறைந்து போய்விடுவா. ஆனால், பெரேரா அப்படிச் செய்பவர் அல்லர். காடையரால் கொதி தார் கொண்டு அம்மாவின் பிறந்தமேனியில் சிங்கள 'சிறி' எழுத முடியாமல் போனது பெரேராவினால்தான்.

நங்கி எண்ட தங்கையை முல்லைத்தீவில் தமிழர்கள் எரித்துப் போட்டாங்கள் எண்டு அழுதழுது சொன்னார் பெரேரா. அவர் தங்கை முல்லைத்தீவில் நேர்சாக இருக்கிறா. ஆனால், எண்ட உயிர் போனாலும் உங்களுக்கு ஒண்டும் நடக்கவிடன் என்று உறுதிசெய்து,

## இலக்கியச்சோலை

நந்தாவை அனுப்பிச் சொதியும், சோறும் கொண்டுவரச் சொன்னார். நந்தா ஒளித்து சொதி தளம்பச் சோறு கொண்டு வந்தா. அதில் நஞ்சு கலந்திருக்கும் என அம்மா அஞ்சவில்லை. நஞ்செல்லாம் கலக்கும் காலம் அப்போது இல்லை. அமுதம் தராயினும் அன்னமாவது தரும் காலம் அது. ஆனால், பெரேராவின் தயவில் தங்கள் வீட்டில் ஒளிந்திருக்க வேண்டி வந்தது அப்பா-அம்மாவிற்கு. மொட்டைத்தலை தடவி பிக்கு ஒரு நாளைக்கு காலையும், பிறகு பின்னேரமுமாக வந்தார். பயப்பிட ஒன்றுமில்லை என்றார். என்றாலும் நீர் கொழும்புப் பக்கம் சிறியசுவாலை வெளிச்சமும், கொழும்புப் பக்கமும் பெருஞ்சுவாலை வெளிச்சமும் தெரியப் பிக்குவும் யோசிக்கத் தொடங்கினார். சிறிலங்காவிற்கு என்ன கேடு வந்தது? பற்றி எரிகின்றது என்று நறநறத்தார். அவர் பண்டாரநாயக்காவைத் திட்டினார். ஹாஜியார் வீட்டில் ஒளிந்திருப்பதுதான் உசிதம் என்று பலரும் அபிப்பிராயப்பட்டார்கள்.

அந்தக் கலவர காலத்திலும், கொலைகள் விழுகிற நேரத்திலும் உருகுகிற தாரினால் தமிழர்மீது, சிங்கள சிறி எழுதுகின்றபொழுதிலும் - உம்மா கண்களில் கலக்கம் படர்ந்திருக்க, முகத்தினில் பீதி குடிகொண்டிருக்கச் சந்தோச மாக இருந்தார். அவாவின் துணைக்கு அம்மா வந்துவிட்டார். அவாவுக்குச் செல்லம் கொஞ்ச ஒரு குண்டுமோள் வந்து விட்டாள். அந்தக் குண்டுமோளும் வீடு முழுவதும் வெள் ளைக்கால் இழுத்துச் சுருண்ட மயிர் நனைத்து, உருண்டு திரிந்தது. எவ்வளவு காலத்திற்குப் பிறகு ஒளி வீசுகிற வீடாக இது ஆகிவிட்டது. அந்தக் குண்டுமோளின் கால்கள் எல்லா அறைகளிலும், வீட்டின் எல்லாப் பரப்பிலும், எல்லாத் தரையிலும் படுகிறதாக அமைய வேண்டும். சுவைபடத் தின்றால் மாம்பழக் கன்னம் விரியக் குறுஞ்சிரிப்பு விரியும். அதற்காக உம்மா இடியப்பம் அவித்தா. பினைய உருளைக் கிழங்கு வேகவைத்தா. அதுவே எல்லோருக்கும் ஆகுவதற்காய் மீன் சொதியும், உருளைக் கிழங்குக் குழம்பும், இறால் பொரியலும் வைத்தா. சாப்பிடத்தான் முடியவில்லை அப்பாவால். சுருட்டுப் பிடித்து ஹாஜியாருடன் குசுகுசுத்துக் கதைத் தார். 'என்ட அல்லாவே' என்று அடிக்கடி பெருமூச்சுவிட்டார். ஹாஜியார் வீட்டின் வெளியே இருட்டைத் துழாவினார்.

செய்யாத வைத்தியமில்லை, இருக்காத விரதமில்லை, வேண்டாத தெய்வமில்லை, பண்ணாத நேர்த்தியில்லை. கல்லு வைத்த கோயிலெல்லாம் கையெடுத்துக்கும்பிடா நாளுமில்லை. பூக்கட்டி வைச்சுப்பார்த்து பரியாரியிட்டைப் போச்சினம். சீமையிலையிருந்து வெள்ளைக்கார டாக்குத்தர் வந்தோடனை ஓடிப்போய்ப் காட்டிச்சினம். அம்மா களைத்தா. அப்பா தடவினார். அப்பா களைத்தார். அம்மா தடவினார். மலடி மலடி என்று வையகத்தார் ஏசுமுன்பே என்று பாட்டுக்கேட்டபோது அம்மா விம்மினார். தன் வயிற்றில் மாறி மாறிக் குத்தினா. யாரும் பிள்ளை பெத்துக் தூக்கிக்செல்லும் பெண் பார்த்து ஏங்கினா. அம்மாளே அம்மாளே என்று அம்மாள் கோயிலில் கிடையாய்க் கிடந்தா.

அம்மாள் அதைக் கொடுக்க ஆறுவருசம் ஆயிற்று. ஒரு மொட்டு முகிழ்த்து, வயிற்றில் வளர்ந்து பத்து மாதத்தில் பந்தாய் உருண்டு, வெள்ளையாய், குண்டாய் உருண்டபடி ஒரு பெட்டை வந்தாள். ஆரும் பார்த்து ஆசைகொள்ளும் மாம்பழம் ஆனாள். அந்த உருண்டைக்கு ஒரு வயது ஆகிவிட்ட நேரம் ஏதும் நடக்குமோ? இது இந்த உலகிற்கு வந்து ஒரு வருசம் போதும் என்று இறைவன் நினைத்தானோ? வந்த ஒரு வருசத்தில் அத்தனை மகிழ்வையும் அள்ளிப் பரப்பிய இந்தச் சிறுமொட்டு ஒரு கணத்தில் சிதையப் போகிறதோ? அப்பா சுருட்டு சுருட்டாய்க் குடித்தார். ஹாஜியார் அப்பாவின் முதுகைத் தட்டினார். உம்மா அம்மாவின் முகத்தைத் தடவினார்.

ஆருக்கும் எதுவும், அட நாங்கள்தான் செத்துப்போகட்டும். இந்தப் பச்சைக் குழந்தைக்கு, பிஞ்சுப்பாலகிக்கு ஏதும் நடக்காது. அல்லாவே அருள் செய்யமாட்டாயா? அம்மாளே பித்தளையில் பெண் செய்து, பெண் கையில் விளக்கு வைத்து, உனக்கு ஒளியூட்ட நீ தந்த அருஞ்செல்வமல்லவா? அழகுத் தெய்வமல்லவா? அவளுக்கு யாதொன்றும் நிகழாமல் அனுக்கிரகம் செய்யமாட்டாயா அம்மாளே.

யாதொன்றும் நிகழவில்லைத்தான். அப்பா அடிக்கடி சுருட்டுக் குடித்தும், அம்மா அடிக்கடி வெத்திலை பாக்குச் சப்பியும், ஹாஜியார் என்ட அல்லாவே என்று அடிக்கடி பெருமூச்சுவிட்டும், உம்மா மொட்டாக்குச் சரியவிடாமல் சரிவரக் காத்தும் ஏங்கிக் கிடந்ததிலோ. அம்மாளின் அனுக்கிரகத்திலோ, பிக்குவின் பிரார்த்தனையிலோ, அல்லாவின் பெருங்கருணையிலோ, அல்லாது இதற்கும் அப்பால் வேறெதாலுமோ ஒன்றும் நிகழவில்லைத்தான்.

ஒன்றும் நிகழாததற்கு உள்ளூர ஏது காரணமோ? வெளிப்பட அம்பிகாபதி அத்தாச்சியும் காரணம். மினுவாங்கொடயில் அவ பெரிய பக்ரறி வைத்திருந்தா. சிங்களவர் போல் தோற்றம் தரும் பெரியசாமி கார் ஓட்ட அப்பாவைத் தேடி வந்துவிட்டா அத்தாச்சி. அக்காவில அத்தாச்சிக்குக் கொள்ளை ஆசை. போக எல்லாம் முடிவானது. மிகுந்த பாதுகாப்புடன் பஸ்ஸில் ஏறினார்கள்.

'அல்லா அல்லா' என்று அடிக்கடி தொழுகை செய்து ஹாஜியார் பயணம் அனுப்பினார். உம்மா விம்மி விம்மி அழுதா, அடுத்த வசனம் வந்தால் இந்தச் சூழலுக்குப் பொருந்தும். ஆனால், அப்படி ஏதும் நடக்கவில்லை. அக்காவையும் தூக்கிக்கொண்டு, அம்மாவையும் இழுத்துக் கொண்டு தனது அறைக்குப்போய் கதவை மூடினா. பிறகு உம்மா என்ன செய்தா என்பதை அம்மா சொல்லமறுக்கிறா. மந்திரிச்சாப் போலை. அம்மாவைக் கட்டி அணைச்சா. அக்காவை இறுக்கி முத்தமிட்டா. அல்லா காப்பாற்றுவார் என்றா. அதை உறுதியாக நம்பினா. அதனால் உம்மா அழவில்லை. ஒரு புன்னகை சிந்தி, ஒரு கை மொட்டாக்கை சரியவிடாமல் பிடித்திருக்க மறுகை அசைத்தா. முன்னும் பின்னும் ஆர்மி ஜீப் பாதுகாப்புக் கொடுத்துப்போக மூன்று பஸ்கள் போயின. அவை அப்பால் ஐம்பது, அறுபது பஸ்கள் ஆயின.

பகலில் பயணம். பொழுதுபட அனுராதபுரம் வந்தது. அப்பா வழியெங்கும் எரிந்த கடைகளை, சிதைந்த கட்டடங்களைப் பார்த்தார். அம்மா நேற்று இந்நேரம் என்ன நடந்தது, முந்தநாள் இந்நேரம் என்ன நடந்தது. போனகிழமை இந்நேரம் என்ன நடந்தது. போனமாசம் இந்நேரம் என்ன நடந்தது என்று நிறைவுற்றுப்போன ஒவ்வொரு நேரத்தையும் தன்னுள் சேமிக்கத் தொடங்கினா. ஒவ்வொரு நேரத்துக்கும் ஆனந்தமும், அழகும், அர்த்தமும், ஆழமும் இருந்தன.

கல்லுலுவவை இனிக் காணமாட்டோம் என்று அம்மாவிற்கு நிச்சயம் தெரிந்தது. ஏங்கவும் செய்தா. உம்மாவைக் காண்மாட்டம், நந்தாவைக் காணமாட்டம். வாய்க்கால் நீரில் நெளிகிற பூரணை இனி இல்லை. பஞ்சிபாராமல் நிறையத் தேங்காய்ப்பால் விட்டுக் காய்ச்சுகிற மீன் சொதி இனி இல்லை. மாசிக் கருவாட்டுச் சம்பல் இல்லை. குண்டுப் பெட்டை குதூகலிக்கும் பொழுது இனி இல்லை.

இரவு குளக்கட்டில் பஸ்கள் நின்றன. சுற்றிவர இருள்தான் இருந்தது. இருளுக்கு எந்த இரக்கமும் இல்லை. 'சளங் சளங்' என்று குளத்தின் தண்ணீர்ச் சத்தம் கேட்டது. முதலை வாயைப் பிளக்கிறதா, வாலால் அடிக்கிறதா எதுவும் தெரியவில்லை. முதலை கரைக்கு வருமா? குளக்கட்டில் ஏறுமா? குழந்தையைப் பிடித்து இழுக்குமோ?

அனுராதபுரத்தின் முதலைகள் பசியோடு அலைகின்றன. அம்பாரம் நுளம்புகள் அக்காவைக் குத்திக் குத்தி இரத்தம் உறிஞ்சின. கையில் கொண்டுவந்திருந்த பேப்பரால் அப்பா விசுக்கினார். அப்பாவிற்குக் கையுளைய அம்மா விசுக்கினா. அம்மாவிற்குக் கையுளைய அப்பா விசுக்கினார். துலைவாங்கள் இதுக்கை ஏன் கொண்டு வந்து வைச்சிருக்கிறாங்களோ தெரியேல்லை. அம்மா புறுபுறுத்தா. சத்தம் போடாமல் பேசாமல் இரும் என்று அப்பா அதட்டினார். சளசளக்கிற சனத்தை பொலிஸ் அதட்டியது. குழந்தைகளின் அழுகுரலை ஆரினாலும் அடக்க முடியவில்லை. அக்கா அழவில்லை, ஆழ்ந்து உறங்கினாள் அந்தப் பெண்.

## குறுநாவல்

அனுராதபுரத்தின் இரவு மிக வெக்கையாக இருந்தது.

சத்தம் போடாதையுங்கோ. அனுராதபுரம் ரவுனுக்கை பெரிய குழப்பம் நடக்குது. அதுதான் இதிலை நிப்பாட்டினாங்கள். ஆர்மிக்கு அறிவிச்சிருக்கு. ஆர்மி வருமட்டும் நாங்கள் இதிலை நிக்கிறது எவைக்கும் தெரியக்கூடாது. சத்தம் போட்டுக் காட்டிக் குடுக்காதையுங்கோ. இன்ஸ்பெக்ரர் கதிர்காமர் தெளிவாகச் சொன்னார். சத்தம் வெகுவாக அடங்கியது. குழந்தையின் அழுகுரல் இடையிட்டுக் கேட்டது. மெல்லிய குரலில் ஓ....ராராரோ.... என்று தாலாட்டு வந்தது.

(தொடரும்...)

## பதில்கள்!



எல்லாரையும் போல்
நானும் காதலிக்கிறேன்!
உன்னை மட்டுமல்ல
என் தாய்நாட்டை
சின்ன மரங்களை
வண்ண மேகங்களை
ஏன் - கடலைக்கூடக்
காதலிக்கிறேன்!
காதலைச் சொன்னபோது,
நாடு உரிமை தந்தது.
மரங்கள் மலர்கள் தந்தன.
மேகம் மழையைத் தந்தது.
கடல் முத்தைத் தந்தது - ஆனால்.
நீ வலிகளையல்லவா தந்தாய்.
ஒருவேளை...
மேகம் இடித்திருந்தால்...
கடல் குமுறியிருந்தால்...
உன்னிடமும்.
என் காதலைச் சொல்லாதிருந்திருப்பேன்.

உ.தமிழ்மாறன்.

## ஞாபகக் கசிவுகள்



அது பாதையல்ல!
பசுந்தரையுமல்ல!
திண்மந்தொட்டு நிற்கும் திரவம்
அசைதலேதுமின்றி நங்கூரமிட்டிருக்கும்
நீர்க்குளம்.
காற்றின் வழிதிறப்பில் கல்லொன்று
அதனுள் ஊடறுத்தலை நிகழ்த்திற்று;
இரும்பின் உறுதியோடு பிறப்பெடுத்து
அகலித்து,
அகலித்து.
கரையோடு மல்லுக்கட்டி நிற்கும் வளையங்கள்!
முறிந்துபோன இருளொன்றின்
எச்சத்துக்களின் பரவுகை
சூனிய வெளியின் கருங்குகையில்
நெருடல் முள்ளின் உதைப்பு.
தெறித்தலின் சூட்டில்
அடைகாத்த நினைவு முட்டைகள்
ஒவ்வொன்றாய் உடைப்பெடுக்கின்றன.
குஞ்சுகளாய் மட்டுமின்றி
ரேடிய ஒளிர் வளையங்களாய்
ஒன்றித்திருத்தலின் உருவங்களாய்
நீராடுதலின் நிறங்களாய்
சீட்டுக் கட்டைகளாய்
பலவாறாய்ப் பொரித்துக் கால் முளைத்து
சிறகுதைக்கின்றன.
எப்படி அடைத்தபோதும்
மன இடுக்குகளின் பொத்தல்களால்
வெளியே வழிதேடிக்
கசிகின்றன அந்த ஞாபகத் துளிகள்!
உனக்கு முரணாய்
என்னோடு கைகோர்க்கின்றன
உன் நினைவுகள்.

- தபின் -

# கிழக்கும் மேற்கும்

## மாமன்னன் அரிச்சந்திரன் – இறைவன்பன் யோபு!



பெரும்பகை கொண்ட ரிஷியோ
காட்டினில் உலவும் கொடிய
விலங்கெலாம் நாட்டுட் சென்று
அழித்திட ஏவி நின்றார்!
விலங்குகள் அழிப்பை மன்னன்
பாணத்தால் தடுத்துக் கொண்டான்!
முனிவர்தம் மூக்கின் ஊடே
எழும் காற்றில் உதித்த இரண்டு
கன்னியர் களினை மன்னன்
முன்பாக அழைத்துச் சென்று
மன்னனைப் பார்த்து "மன்னா!
இவர்களை மணப்பாய்" என்றார்!
மன்னனோ ரிஷியைப் பார்த்து
"ஆட்சியை இழப்பே னல்லால்
இவர்களை மணக்கேன்" என்றான்
"ஆட்சியை எனக்கு இன்றே
அளித்திட வேண்டும்" என்று
மகரிஷி கேட்ட போதே
ஆட்சியை ரிஷிக் களித்தான்
வாய்மொழி மாறா மன்னன்!
ஆட்சியைப் பெற்ற முனிவர்
வஞ்சனை நெஞ்சி னோடே
"நாட்டினை விட்டு விரைவில்
செல்லுவாய்" என்று கூற
நாட்டினை விட்டு மன்னன்
நீங்கிடும் போது முனிவர்
"எனக்குநீ யாகம் செய்ய
முன்தந்த பொருளும் வேண்டும்"
எனக் கேட்ட போது; மன்னன்
"நாட்டினைத் தந்த போதே
அனைத்தையும் உமக்குத் தந்தேன்"-
என்றவன் உரைக்கக் கேட்டு
"ஆட்சியைத் தந்து போது
யாகத்துக் களித்த பொன்னும்
இதிலுண்டு என்று எதுவும்
நீ சொல்ல வில்லை" என்றார்!
இது கேட்ட மன்னன் அந்தப்
பொருட்களைத் தருவதற்கு
நாட்சில பொறுக்க வேண்டும்
என்றதும் முனிவர் "மன்னா!
கேட்டது இயலா தென்றால்
ஒப்புக்கொள்! கேட்க மாட்டேன்"
என்றதும் ரிஷியின் உள்ளக்
கருத்தினை அறிந்து கொண்டு
"எத்தடை வந்த போதும்
தருவதாய்ச் சொன்ன வற்றை
அளித்திடு வேனே யல்லால்
வாக்கினில் மாற மாட்டேன்!
அளித்திடச் சில தினங்கள்
பொறுத்திட வேண்டும் என்று
கேட்டுடன் நாட்டை விட்டு
மனைவியும் மகனும் சூழக்
கேட்டினை விலக்க எண்ணிக்
காசியம் பதியைச் சேர்ந்தான!

முருகு

(தொடரும்...)

# A-9 னை நீளும் நினைவுகள்

- ஜெயங்கொண்டான்.



பகுதி - முப்பத்திநான்கு

வானில் விண்மீன் வகையின் திசையினைக்
கணித்து மற்றக் கரையை அடைந்திட
ஓடும் வள்ளத்தை மோந்து... கரையிருந்து
ஒளிருந் 'தேடல் வெளிச்சம்'? அதன்விழி
பார்த்திடில் போர்ப் படகு புறப்படும்.
பயணப் படகுகள் மீது வெடிசுடும்.
'ஆழி அவலமாய்'த் தப்ப வழியின்றி
அந்தரிப் போரை அலைகள் விழுங்கிடும்.

பயணப் பாதைப் பலியெடுப்பால்.:.இளம்
பச்சைக் கிளாலிக் கடலோ சிவப்பாகி
உயிர்ப்பிழந்தது! தெற்கு புறப்பட்டோர்...,
ஊர் திரும்பியோர், உடல்கள் மிதந்தன!
உயிர் தொலைத்துப் பயணந் தொடர்கையில்
'உயிர் வெடிகள்' முழங்கத் தொடங்கின.
உயிரெடுத்தவர் உடல்கள்... அதன் பின்னர்
ஊதிப் பருத்துக் கரையில் ஒதுங்கின.

இந்த வாறு இருக்கையில்... பூ நகர்த்
தளத்தின் மீதும் இடிகள் இறங்கின
சண்டமாருதம் வீசிக்... கடலிலும்
தரையிலும் 'தவளை' எனப் பாய்ந்தது.
நந்தி போலவே குறுக்கிருந்த... ஞானி
மடமும், நாக தேவன் துறையதும்
அன்று சாய்ந்தது! ஆயினும்... ஆணிவேர்
அறுந்து போகாமற் தளம் மீண்டு கொண்டது.

# நூல் அகம்

## வானலையின் வரிகள்...




வானொலியில் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் அந்த நிமிடமே காற்றோடு காற்றாகப் போய்விடும். அந்த நேரத்தில் காதின் வழிமூலம் கேட்டு, கிரகித்துக் கொள்வதுதான் அந்த நிகழ்ச்சி கேட்போரின் பெறுபேறாக இருக்கும். இந்த நிகழ்ச்சிகளை நூல் வடிவில் ஆவணப் படுத்தும்போது- அந்த நிகழ்ச்சியின் தரம், தாக்கம் பற்றி ஆற அமர இருந்து சிந்திக்கும் வாய்ப்புண்டு.

இந்த வகையில், வானொலி அறிவிப்பாளர் இளையதம்பி தயானந்தா வானொலிமூலம் கண்ட நேர்காணல்களை நூலுருவாக்கி வெளியிட்டுள்ளார்.

'வானலையின் வரிகள்' என்ற இந்த நூலில் பேராசிரியர் கா.சிவத்தம்பி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

நேர்காணப்படுபவர் தனது ஆளுமைகள், பின்புலங்கள் என்பவற்றைத் தாண்டி, முழுப்பிரக்ஞை உணர்வுடன் பதில் தரும் நிலைக்கு, தயானந்தாவின் பேட்டிகள் அவர்களை அழைத்துச் செல்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த நூலில் தமிழகத்திலுள்ள பிரபல படைப்பாளிகள், அறிஞர்களின் நேர்காணல்கள் இடம்பெற்றுள்ளன.

முதலில் பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தனின் நேர்காணல் இடம்பெற்றுள்ளது. இளைஞனாக இருக்கும்போது, மார்க்ஸிசப் பண்ணையில் வளர்ந்து, பின்பு தனது கொள்கையிலிருந்து சற்றுவிலகிப் படைப்புக்களைப் படைத்துள்ளார்.

இந்தப் பேட்டியில் கம்யூனிஸ்ட் கட்சி பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் -

"அவர்களோடு நான் இருந்து வளர்ந்து, வாழ்ந்து கற்றுக்கொண்டவன். ஆனால், அவர்களுக்குத் தாலி கட்டியவனல்ல" என்று குறிப்பிட்ட அவர், மார்க்ஸ் பற்றிக் குறிப்பிடுகையில -

"மார்க்ஸின் எல்லாக் கொள்கைகளையும் நான் ஏற்றுக் கொண்டேன் என்று சொல்லமுடியாது. ஒரு இந்தியன் என்ற முறையில் எனக்கு அவரோடு சில அடிப்படை வேறுபாடுகள் இருந்ததுண்டு. ஆனாலும், மார்க்ஸை நான் மதிக்கிறேன்" என்கிறார். இந்த நேர்காணலில் தயானந்தா, ஜெயகாந்தனை துருவித் துருவிப் பல கேள்விகளைக் கேட்டு, அவரது உண்மை நிலையினை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்.

இதேபோன்று கணையாழி, தினமணி, குமுதம், குங்குமம், இந்தியா ருடே ஆகிய பத்திரிகைகளில் கடமையாற்றிய எழுத்தாளர் மாலனிடம் இலங்கை எழுத்தாளர்களைப் பற்றிக் கேட்டபோது-

"என்னுடைய கணிப்பில் கவிஞர் மஹாகவிக்குத் தமிழ்க் கவிதை உலகில் முக்கிய இடமிருக்கு. ஆனால், தளையசிங்கத்தைப் பொறுத்தவரையில், அவருடைய தத்துவங்கள் தமிழ்நாட்டு மக்களால் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய தத்துவங்கள் அல்ல என்று நான் நினைக்கிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சாரு நிவேதிதா என்ற எழுத்தாளரின் நேர்காணலில், இலங்கை பற்றிக் குறிப்பிடுகையில் - தேசத்துக்காக இவ்வளவு பேரைப் பலி கொடுத்து உடம்பிலும், மனசிலும் காயங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கும் அவனுக்கு வன்முறை மேல் நம்பிக்கையில்லாதுபோய், வாழ்வை வேறுமாதிரி வாசிக்கிறவனாக அவன் மாறிவிடுகிறான். இந்த மாதிரியான மனிதவதையை இலங்கையில் எழுதிக்கொண்டிருக்கும் தமிழ் எழுத்தாளர்கள் யாராவது எழுத்தில் கொண்டு வந்திருக்கிறார்களா என்பதை நாம் தேடிப்பார்க்கவேண்டிய அவசியமிருக்கு" என்று குறிப்பிடுகிறார் எழுத்தாளர் சாரு நிவேதிதா - இலங்கையில் என்ன நடந்தது என்று தெரியாமல்.

இந்த நூலில் கவிஞர் சுரதா, எழுத்தாளர் பிரபஞ்சன், கவிஞர் கருணாநிதியின் மகள் கனிமொழி, பாலகுமார், மு.மேத்தா போன்ற பல படைப்பாளிகளின் நேர்காணல்களும் இடம்பெற்றுள்ளன.

மொத்தத்தில் தமிழகத்துப் படைப்பாளிகளைப் புரிய வைக்கும் நேர்காணல்கள் இடம்பெற்றது போன்று, ஈழத்து எழுத்தாளர்களின் நேர்காணல்களும் இடம்பெற்று அவை நூலுருவாக வெளிவர வேண்டுமென்பதுதான் தயானந்தாவுக்குரிய கோரிக்கையாகும். - மணிசேகரன்

# பாலையும் சோலையும்

## கலாநிதி சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்

மொடேன் திரைப்பட மாளிகையிலிருந்து இரவு பன்னிரண்டு மணிவரை, படப்பாட்டுக்கள் பெரும் ஓசையுடன் ஒலிபரப்பாகிச் செவிகளை இனிக்க வைப்பதும் உண்டு. சிலவேளைகளில் உறுத்துவதும் உண்டு. பன்னிரண்டு மணிக்குப் பின் எங்கள் மாடிக்குக் கீழிருந்த தேநீர்க கடையின் பின்னறையில் சூதாட்டமும், சூதாட்ட வட்டிகளைக் குலுக்கும் ஓசையும் விடியும்வரை தொடரும்.

இரவு பத்து மணிவரை சகஆசிரியர்கள் கடதாசி விளையாடுவார்கள். அவ்விளையாட்டில் கலந்து கொள்ளாதவர்கள் உலகத்து வம்புகளையெல்லாம் அளந்துகொண்டிருப்பார்கள். படுக்கையிலே சாய்ந்தவர்கள் மூட்டைக்கடிக்கு ஆற்றாது உருண்டு புரள்வார்கள். விழித்தெழுந்து மூட்டைச் சங்காரத்தில் ஈடுபடுவதும் உண்டு.

மாலைநேர உலா சனி, ஞாயிறுகளில் படம் பார்த்தல் என்று பெரும்பாலான நேரங்கள் வீணாகவே கழிந்தன. ஆனால், கல்லூரிகளுக்கு ஒழுங்காகச் செல்வதும், வஞ்சகமின்றி எம்மால் இயன்றளவு திறம்படக் கற்பித்தலும் தவறாது நிகழ்ந்தன.

சிங்களவர், தமிழர், பறங்கியர், முஸ்லிம்கள் என்ற பல்லினக் கலப்பான ஆசிரியர்கள், மாணவர்கள் சங்கமித்த கல்லூரிகளிலே, ஆங்கிலமே பொதுமொழியாயிருந்தது. தமிழையே கற்று ஆங்கிலத்தை அறியாதிருந்தாலும், எல்லோரும் சரியாகவோ, பிழையாகவோ ஆங்கிலத்தில் உரையாடவேண்டிய நிர்ப்பந்தமும் இருந்தது. கருத்துப் புலப்பாடு, உணர்சசி வெளிப்பாடு என்பனவே முக்கியமாகக் கொள்ளப்பட்டபடியால், உடையலாங்கிலத்தை (Broken English) எவரும் பெரிதுபடுத்துவதோ, கேலிசெய்வதோ இல்லை.



ஓர் உதாரணம் தருகிறேன்.

எனது வகுப்பிலே - நாலாம் வகுப்பிலே ஒரு மாணவன் மெலிந்த, குள்ள உருவினன். தகப்பனார் இறந்து, சிறிய தகப்பனாரின் பராமரிப்பில் அவனும், தாயும் இருந்து வந்தனர். வறுமையின் கொடுமையில் சிக்கிய குடும்பம். ஒருமுறை அவனால் கல்லூரிக் கட்டணத்தைச் செலுத்தமுடியவில்லை. எனக்கு, அவன் குடும்பநிலை முன்பே தெரிந்திருந்ததால், அவனுடைய நிலையை அதிபருக்கு எடுத்துரைத்து, பாடசாலைக் கட்டணத்திலிருந்து தவிர்வு பெற்றுத்தர எண்ணி, அவனையும் அழைத்துக்கொண்டு அதிபரிடம் சென்றேன்.

அதிபர் எவ்.என்.பெற்றி ஆராய்ச்சி உடையிலும், உரையிலும் பழுத்த 'பிறவுண் சாகிப்' அவருடைய ஆங்கில உச்சரிப்பு சுத்தமானது, ஆங்கிலம் வளமானது. அவருக்கு நானும், மாணவனும் வணக்கம் செலுத்தினோம். அவரும் வணக்கம் செலுத்திவிட்டு, அவனை அழைத்து வந்த காரணத்தைக் கேட்டார். நான் எனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் விளக்கினேன் அதிபர் அனுதாபத்துடன் அவனை நோக்கி, "My dear lad! who is your guardian?" (அன்பான பிள்ளையே, உன்னைப் பராமரிப்பவர் யார்?) என்று வினாவினார்.

(தொடரும்...)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
மன்னர்க்கு மன்னுதல் செய்கோன்மை
அஃது இன்றேல்
மன்னவாம் மன்னர்க்கு ஒளி
- திருக்குறள்

# நமது நோக்கு

## அதிகாரப் போட்டி !

தெற்கில் - நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிக்கும், அமைச்சரவைக்குமான அதிகாரப்போட்டி, இப்போது முக்கியமான பிரச்சினையாகி வருகின்றது.

இதுவரை இருதரப்பிலும் பேசப்பட்டு வந்த 'சக வாழ்வு அரசியல' விடயம் வெகுதூரம் விலகிப்போக, ஜனாதிபதியும் - அமைச்சரவையும் நேரடியாகவே தமது பலத்தைப் பரீட்சிக்கும் களங்களில் இறங்கியுள்ளனர்.

இலங்கையின் ஆட்சியமைப்பைப் பொறுத்தவரையில் - நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியால், 'சூரியனுக்குக் கீழே எதையும் சாதித்துவிட முடியும்' என்ற அதிகார மிதப்பு உருவாக்கப்பட்டதன் பின்பு -

ஜனாதிபதியும், அமைச்சர்களும் இருவேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்ற நிலைப்பாடு இம்முறை இரண்டாவது தடவையாக ஏற்பட்டுள்ளபோதும்-

முன்னாள் ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்கவுக்கும், அப்போதைய பிரதமர் சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இருந்த முரண்பாடுகளைவிட - இந்த முறை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான அரசியல் அதிகாரப் போட்டியும், பகைமையுணர்வும் அதிகமாகவே காணப்படுகின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில், அவர் மென்போக்கு அணுகுமுறை கொண்டவராகத் தெற்கின் அரசியற்களத்தில் சித்திரிக்கப்படும்போது-

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோ தனது தடாலடி அரசியல் நடவடிக்கைகளால் - இருவேறு அதிகார பீடங்களிடையேயும் இடைவெளியை அதிகமாக்குவது போன்றும், மேலாதிக்கம் செலுத்த முனைபவராகவும் நடந்து கொள்பவராகத்தான் காணப்படுகின்றார்.

அதிலும் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியை அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் சந்திக்கச் செல்லும் வேளையிலெல்லாம் - ஜனாதிபதி மிகக்கண்டிப்பான, உரத்தகுரலில் ரணிலுடன் வாதிடுவதையும் - பிரதமர், அப்போதும் மென்போக்குடனேயே உரையாடத் தலைப்படுவதையும் அவர்களுக்கு நெருங்கியவர்களே அவதானித்திருக்கின்றனர்.

பிரதமர் ரணில் இவ்விதமாகத் தோன்றினாலும் - அவரைச் சூழவும் இருக்கின்ற கடும்போக்காளர்களும், ஜனாதிபதி சந்திரிகாவை ஜென்மவிரோதியாகக் கருதும் எஸ்.பி.திஸநாயக்க, மஹிந்த விஜேசேகர, பேராசிரியர் பீரிஸ் போன்றவர்களும் - ரணிலுக்கும் 'கொம்பு சீவிவிடாமல' இல்லை.

இந்தவகையில் - 'நிறைவேற்று அதிகாரம்' என்ற வலு வீச்சுக் கொண்ட அதிகாரபீடத்திலிருக்கும் ஜனாதிபதி சந்திரிகாவும் - பிரதமர் ரணிலும், சகாக்களும் நேரடியாகப் பலப்பரீட்சையில் குதித்திருக்கும் வேளையில்-

தேசிய லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றதிலிருந்து முறுகல்நிலை இன்னமும் தீவிரமடைந்தே வருகின்றது.

தேசிய லொத்தர் சபையை ஜனாதிபதி தம்வசம் எடுத்துக் கொண்டதற்கான வர்த்தமானி அறிவித்தலை இதுவரையில் - தகவல் தொடர்பாடல் அமைச்சின் கீழுள்ள அரசாங்க அச்சகம் பதிப்பித்து வெளியிட மறுத்து வருவதால், உச்சக்கட்ட கோபத்திலிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - பிரதமர் ரணிலுக்கும், சகாக்களுக்கும் மேலும் சில அதிர்ச்சிகளைக் கொடுப்பதற்குத் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

ஜே.வி.பியுடனான - பொதுஜன ஐக்கிய முன்னணியின் இணக்கப்பாட்டை உத்தியோகபூர்வமாக்கிக் கொள்வதன் மூலம் - எதிர்க்கட்சிகளின் பலத்தை அதிகரித்துக்கொண்டு - பிரதமர் ரணில் அரசாங்கத்தை வீழ்த்த அல்லது பலவீனப்படுத்த - ஜனாதிபதி முயற்சிக்கவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

அதிலும் - ரோக்கியோவில் நடைபெறவிருக்கின்ற உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டுக்குப் பிரதமர் ரணில் புறப்பட்டுச் சென்றதும் - முக்கியமான சில நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொள்ளலாமெனவும் ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

விடுதலைப் புலிகள், ரோக்கியோ மாநாட்டில் பங்கேற்காத பட்சத்தில் - உதவிவழங்கும் நாடுகளின எதிர்வினைகள், நிதியுதவிகள் என்பவற்றில் பிரதமர் ரணில் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ள சமயத்தில்- ஜனாதிபதியும் நெருக்குதல்களைக் கொடுக்கும் வாய்ப்பைப் பயன்படுத்த முனைவது - தெற்கில் இந்த வாரத்தை கலம்பகத்துக்குரிய வாரமாகவே பிரகடனப் படுத்தியிருக்கிறது.

# வீட்டையே தரமுடியாதவர்கள் நாட்டினைத் தருவார்களா?



விடுதலைப் புலிகள் வட - கிழக்குக்கு இடைக்கால நிர்வாகம் ஒன்று, அரசியல் யாப்புக்கு வெளியே உருவாக்கப் படவேண்டுமென்ற வேண்டுகோள் விடுத்தார்களோ, இல்லையோ தென்னிலங்கை அரசியலில் வேதாளம் மீண்டும் முருக்க மரத்தில் ஏறிவிட்டது.

விடுதலைப் புலிகள் முன்வைத்த கோரிக்கைக்கு - தமிழர் தேசிய கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மலையக முன்னணி ஆகியோர் ஒட்டுமொத்தமாக ஆதரவு தெரிவித்திருக்கின்றனர்.

இருந்தும் சிங்கள இனவாத சக்திகளான - சிஹல உறுமய, பௌத்தபிக்குகள் முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி எல்லோரும் தலையில் கைவைத்து, ஒப்பாரிவைத்து அழுகின்றனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போர்க்கொடி தூக்கி விட்டார். கொழும்பிலுள்ள வெளிநாட்டு நிருபர்கள் சங்க உறுப்பினர்களைக் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஜனாதிபதி மாளிகையில் சந்தித்த சந்திரிகா குமாரதுங்க, இலங்கையின் அரசியலமைப்புக்கு வெளியே நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை அமைக்கவேண்டுமென்று விடுதலைப் புலிகளின் கோரிக்கை முட்டாள்தனமான யோசனை என்று வர்ணித்துள்ளார். அப்படி விடுதலைப் புலிகள் அரசியலமைப்புக்கு அப்பால் செயற்படுமாறு அரசாங்கத்தைக் கேட்பதற்கு அவர்களுக்கு எவ்வளவு துணிச்சல்? என்று கேள்வியும் எழுப்பியுள்ளார்.

மேலும், அவர் பேசுகையில் - "விடுதலைப் புலிகள் வன்முறையைக் கைவிட்டுத் தங்கள் ஆயுதங்களை கீழே வைத்த பிற்பாடுதான் 'இடைக்கால நிர்வாக அவை' பற்றி யோசிக்கப்படும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இது முற்றிலும் எதிர்பார்த்ததே. ரணில் விக்கிரமசிங்கவும்- அவரது ஐக்கிய தேசியக் கட்சியும், சந்திரிகா குமாரதுங்கவும் - அவரது சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கொண்டுவரும் அரசியற்த்தீர்வை எதிர்ப்பதும், ரணில் விக்கிரமசிங்கவும் - அவரது ஐக்கிய தேசியக் கட்சியும் கொண்டுவரும் தீர்வை, சந்திரிகா குமாரதுங்கவும் - அவரது சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதிர்ப்பதும் காலங்காலமாக நடந்துவருகிற தொடர் கதை.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை மாறினாலும், இனச்சிக்கல் பற்றிய அதன் அடிப்படை அரசியல் கோட்பாடு மாறுவதில்லை.

அதேபோல் - சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை மாறினாலும், இனச்சிக்கல் பற்றிய அதன் அரசியற் கோட்பாடு மாறுவதில்லை.

வட - கிழக்குக்கு 'இடைக்கால நிர்வாக அவை' உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை ஒன்றும் புதிதல்ல. இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலந்தொட்டு (1987) இந்த 'இடைக்கால நிர்வாக அவை' பற்றி அவ்வப்போது பேசப்பட்டு வந்திருக்கிறது.

இப்போது உருவந்ததுபோல் சன்னதம் ஆடும் ஜனாதிபதி சந்திரிகாவே - "வடக்கு நிர்வாக சபையை உருவாக்கி, அதனை பிரபாகரனிடம் 10 ஆண்டுகள் கொடுக்கத்தயார்" என்று பகிரங்கமாகச் சொல்லியிருக்கிறார்.

1988 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9 ஆம் நாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமெரிக்காவில் இருந்து வெளியாகும் **'Time'** சஞ்சிகைக்கு ஒரு நேர்காணல் கொடுத்தார். இதுவரைகாலமும் மறுக்கப்படாத அந்த நேர்காணலில் இடைக்கால நிர்வாகம் பற்றிக் கேட்டபோது -

**"The president told time, she promised prabhakaran an autonomous package and also said if he stopped fighting he could run the northern province using his police force, without having to face elections for up to 10 years. she says the Tiger chief didn't respond."**

"ஜனாதிபதி **'Time'** சஞ்சிகைக்குச் சொன்னதாவது - பிரபாகரன் யுத்தம் செய்வதை நிறுத்திக்கொண்டால், அவருக்கு ஒரு சுயாட்சிப் பொதியை வழங்குவேன் என்று நான் வாக்குறுதி அளித்தேன்.

எந்தத் தேர்தலுக்கும் முகங்கொடுக்காமல் 10 ஆண்டுகள் வடமாகாணத்தை அவரது காவற்துறையைப் பயன்படுத்தி அவர் ஆளலாம். ஆனால், எனது வாக்குறுதியையிட்டுப் பிரபாகரன் எதையுமே சொல்லாமல் இருந்துவிட்டார்."

- இதன்படி ஜனாதிபதி சந்திரிகா விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழேபோடவேண்டும் என்று நிபந்தனை எதுவும் போடவில்லை. யுத்தத்தை நிறுத்திக்கொண்டாலே போதும் என்பதுதான் அவர் போட்ட நிபந்தனையாகும்.

அதுமட்டுமல்ல, வடக்கை ஆள்வதற்குக் காவற்துறையைப் பயன்படுத்தலாம். அதன் பொருட்டு சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பு தலைவர் பிரபாகரனது, விடுதலைப் புலிகள் கையில் இருக்கும் என்பதாகும்.

ஜனாதிபதி சந்திரிகாவைப் போலவே, பிரதமர் ரணில் விக்கி ரமசிங்கவும் 2001 இல் நடந்த தேர்தல் கூட்டங்களில் பேசும் போது, வட - கிழக்குக்கு 'இடைக்கால நிர்வாக அவை' உருவாக்கப்படும் என்று மிகத்தெளிவாகப் பேசினார்.

சென்ற ஆண்டு ஜூன் மாதம் தன்னைச் சந்தித்த உலகவங்கி அதிகாரிகளுடன் உரையாடும்போது - "தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் அமைதிப் பேச்சுவார்த்தையின் முக்கிய குறிக்கோள் 'இடைக்கால நிர்வாக அவை' ஒன்றை நிறுவி, வடக்கு-கிழக்குப் பகுதியின் (பொருளாதார) மேம்பாட்டைத் துரிதப் படுத்துவதே" எனக் குறிப்பிட்டார். இந்தச் செய்தி சீனப் பொதுவுடைமைக் கட்சியின் உத்தியோகபூர்வ ஏடான **People's Daily** (06-06- 2002) பத்திரிகையில் வெளிவந்தது.



**"Sri Lanka prime Minister Ranil Wickremesinghe has told the visiting World Bank donor community that the principal objective of the proposed peace talks between, the government and the Tamil Tiger rebels in Thailand and soon was to setup an interim administration in the north and east of the country and speed development of the area."**

எனவே, ஜனாதிபதி சந்திரிகா சரி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சரி - இருவருமே வட - கிழக்குக்கு ஒரு 'இடைக்கால நிர்வாக அவை' வேண்டும் என்று கூறிவந்திருக்கின்றார்கள். அதனை விடுதலைப் புலிகள் கையில் கொடுக்கவும் தயாராக இருந்தார்கள்.

வடக்கு - கிழக்கிற்கு அதிக அதிகாரங்களுடன் கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தேவை என்ற புலிகளின் கோரிக்கை தொடர்பாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதில் அனுப்பியுள்ளார்.

பதில் எதுவாக இருந்தாலும் இடைக்கால நிர்வாக அவையை அவர் நிராகரித்துவிட்டார் என்பதை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பத்திரிகைகளுக்கு - தனது வாராந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் தெளிவுபடுத்தியுள்ளார்.

இடைக்கால நிர்வாக அவைக்குப் பதில், அரசு இன்னொரு கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. அது அரசியல் சட்டவரம்புக்கு அமையவே இருக்கும் என்று கூறியிருக்கிறார்.

அமைச்சர் பீரிஸின் நிலைப்பாடு சிறிலங்கா அரசின் நிலைப்பாடுதான் என்பதை உறுத்திப்படுத்துவதுபோல், அரசின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இடைக்கால நிர்வாக அவை தொடர்பாக ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

**"The Government categorically states that there is no truth whatsoever in the statements made by some organizations that the Government has reached an agreement to establish an Interim council with the support of the LTTE to administer North-East Provinces. the Government also wishes to state that these statements are not only utterly false but also misleading the general public."**

"விடுதலைப் புலிகளது ஆதரவோடு வட - கிழக்கு மாகாணங்களில் ஒரு இடைக்கால அவையை உருவாக்க அரசு ஒரு தீர்மானத்துக்கு வந்துள்ளதாக, சில அமைப்புக்கள் விடுக்கும் அறிக்கைகளில் எந்தவிதமான உண்மையும் இல்லை என்று

**கனடாவிலிருந்து நக்கீரன்**

அரசு தெளிவாக்க விரும்புகிறது. இந்த அறிக்கைகள் பொய்யானவை என்பது மட்டுமல்லாமல், அவை மக்களைத் தவறான முடிவுக்கு வரத்தூண்டுவதாகவும் உள்ளது."

விடுதலைப் புலிகள் கேட்பதோ அரசியல் யாப்புக்குப் புறத்தே செயற்படக்கூடிய ஒரு 'இடைக்கால நிர்வாக அவை.' அரசாங்கமோ அரசியல்யாப்புக்கு உட்பட்ட ஒரு அமைப்பையே வட - கிழக்கு நிர்வாகத்துக்கு முன்வைத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்டச் சிறப்புத் தளபதி கருணா "வீடுதர முடியாதவர்கள் எப்படி நாடு தரப் போகிறார்கள்?" என்று அண்மையில் கேட்டார்.

ஒரு இடைக்கால நிர்வாக அவைக்கே இந்தப்பாடு என்றால்- தமிழ்மக்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் தங்களைத் தாங்களே ஆளுகின்ற தன்னாட்சி உரிமைகொண்ட அரசியல் அமைப்பை யார் தரப்போகிறார்கள்? எந்த யுகத்தில் தரப் போகிறார்கள்?

# சிறுவர் பிரச்சினைகளை ஆராயும் நிகழ்வு வீரசிங்கம் மண்டபத்தில்!

## எதிர்வரும் 7ம் திகதி நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனம், வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம், சிறுவர் ஊடகத்துறைக்குழு ஆகியன இணைந்து எதிர்வரும் 7 ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் சிறுவர் செயற்பாட்டிற்கான அமைப்பென்ற நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறுவர் எதிர் கொள்ளும் பிரச்சினைகளையும், நிலைமைகளையும் சிறுவர்களே முன்வைக்கவுள்ளனர்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்வித்திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலர்கள், மாவட்டச்செயலர், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள், புனர்வாழ்வு - புனரமைப்பு அமைச்சர், இந்துசமய விவகார அமைச்சர் உட்பட பலர் இந்நிகழ்வில் பங்கு கொள்ளவுள்ளனர் எனச் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் பி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

இந்நிகழ்வு காலை 9.30 மணிக்கு ஆரம்பித்து பிற்பகல் 1 மணிவரை நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.(சு,57)

# யாழ்.நூலக எரிப்பால் அதிர்ச்சியுற்று உயிரைக் கொடுத்த தாவீது அடிகள்!

தாவீது அடிகளாரின் பல்துறைப் பணியைக் குறிப்பாக - அவரது ஆயவுத்துறையை ஆராய்வதற்கு முன்பு, துரை ஆரோக்கியதாசன் இவரது தோற்றத்தையும், ஆளுமையையும் பின்வருமாறு உள்ளம் தொடும்வகையில் படம்பிடித்துக் காட்டுகிறார். இதோ அவர் எடுத்துரைக்கும் பாங்கு -

'எழில்மிக்க செவ்விளநீர் நிறம், புன்னகைபூத்துப் பொலிவோடு விளங்கும் முகம், ஞானக்குறியாகத் தோன்றும் வெண்ணிறக் குறுந்தாடி, அறிவொளி அவாவும் கண்கள், எடுப்பான கூரிய மூக்கு, ஈகையில் வள்ளல், பாரியை மிஞ்சும் கரங்கள், உருவத்தில் குறுமுனி அகத்தியர், நெப்போலியன் போன்று அபூர்வ ஞாபகசக்தி மிக்கவர். நேரத்தை உயிர்போன்று செயலுருவப்படுத்தியவர். ஒழுங்கும், சிக்கனமும் இவருக்கு இருகண்கள் போன்றவை. மனித கணினியாகவும், நுண்ணறிவு மிக்க நடமாடும் பல்கலைக் கழகமாகவும் திகழ்ந்தவர். துறவியின் இடது கரத்தில் 'ரெனிஸ்' வீரனைப் பிரதிபலிக்கும் 'ரக்கெற்', வலது கரத்தில் மரியாளின் வீரவாளாகிய 'திருச்செபமாலை' ஒருமுறை பார்த்தாலே நெஞ்சில் நிறைந்திடும் தோற்றப் பொலிவு. உந்துசக்திமிக்க ஆளுமை (Dynamic personality). இவற்றின் ஒட்டுமொத்தமே தாவீதடிகள் என்பது வெள்ளிடமலை'.

### பிறப்பும் கல்வியும்

'நும்மொழியின் சான்ற சிறப்பைத தமிழ்மக்களே! இனிதே முழுதும் உணர்மின்' என்று தன்னிலை மறந்திருந்த தமிழ்மக்களுக்குத் தமிழின் தகைமையை உணர்த்தியவர் தாவீதடிகள். இவர், யாழ்ப்பாண புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராக விளங்கிய ஆபிரகாம்பிள்ளை டேவிட் அவர்களுக்கும், அவரின் துணைவியார் எலிசபெத் அம்மையாருக்கும் 1907.06.28 அன்று பருத்தித்துறையில் தும்பளையைச் சேர்ந்த மாவச்சை என்னும் சிற்றூரில் பிறந்தார். இவர் பிறந்த சிலநாட்களிலேயே அன்னையை இழந்தார்.

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியில் மாணவனாக 1913 இல் சேர்ந்த இவர், 1924 இல் உயர்தர இறுதித் தேர்வுவரை கற்றார். கற்க கசடறக் கற்ற இவர், லண்டன் மற்றிக்குலேசன் தேர்வு இரண்டிலும் முதலாம் வகுப்பில் தேறி, அக்கல்லூரி வரலாற்றில் தனியிடம் பெற்றார். இவரைப் பெற்ற தந்தை, தந்தை என்ற நிலையோடு குருவாகவும் விளங்கி, தாவீதடிகளின் வாழ்வு வளம்பெற வழிகாட்டினார்.

புனித பத்திரிசியார் கல்லூரியில் பயின்ற இவர், தன் படிப்பை இங்கு முடித்த நிலையில் 1933, 1936 காலகட்டத்தில், கொழும்புப் பல்கலைக் கழக இளங்கலைப் பட்டத்தில் தேர்ச்சியடைந்தார். இளங்கலைக் கல்வியில் வரலாற்றுத்துறையில் சிறப்புப் பட்டம் பெற்றார். இங்கிலாந்து வல்லாண்மை செழித்த நாடுகளில் வெளிவாரி மாணவர்களில் அதிகூடிய புள்ளி மதிப்பெண்ணைப் பெற்று பொருளியல், அரசியல் ஆகிய துறைகளில் தங்கப் பதக்கத்தையும் பெற்று, கல்வி உலகில் தனிச்சிறப்பு எய்தினார்.

### குருத்துவப் பணியில் தாவீது அடிகள்

கல்வித்துறையில் இவர் மேம்பட்டு விளங்கியபோதும், குருத்துவப் பணி தனக்கு இறைவன் இட்ட கட்டளை என, கொழும்பு புனித பேணாட் குருத்துவக் கல்லூரியில் நிறைவான பயிற்சியைப் பெற்று, 1931.12.21 இல குருவாக நியமிக்கப்பட்டார். சிறிது காலம் புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பணி புரிந்தார்.

### பத்திரிசியார் கல்லூரியில் பணி

புனித பத்திரிசியார் கல்லூரியோடு இவர் வாழ்வு பின்னிப் பிணைந்திருந்ததற்கமைய 1936 ஆம் ஆண்டுமுதல் 1947 ஆம் ஆண்டுவரை 11 ஆண்டுகள் சீரோடும் சிறப்போடும் இவரது வாழ்வு அமைந்திருந்தது. பின்பு தாவீது அடிகள் 1947 ஆம் ஆண்டுமுதல் 1952 ஆம் ஆண்டுவரை வெளிநாடு சென்று உயர்பட்டங்கள் பெற்று, மீண்டும் பத்திரிசியார் கல்லூரியில் மத்திய பிரிவு கல்வி மேற்பார்வையாளராகவும் பணியாற்றினார். ஞாலம் புகழும் ஞானப்பிரகாச அடிகளார் சொற்பிறப்பாய்வில் முன்னோடியாக விளங்கியவர். இவரின் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி நிறைவுபெறும் நிலையில் 1947.01.22 இல் இவ்வுலக வாழ்வைத் துறந்தார். ஞானப்பிரகாச அடிகளுக்கும், தாவீது அடிகளுக்கும் பிரிக்கமுடியாத பிணைப்பு விளங்கியது. 'நான்விட்ட குறையை நீதான் நிறைவேற்ற வேண்டுமென்பது, ஞானப்பிரகாசர், தாவீது அடிகளுக்கு இட்ட அன்புக்கட்டளையாகும்.

'ஒல்காப்புகழ் வாய்ந்த தொல்காப்பியத்தில்' தனி ஈடுபாடு கொண்



டிருந்த நம் தாவீதடிகள் தொல்காப்பியம் சார்ந்த எழுநூறு பக்கம் கொண்ட ஆய்வு ஏட்டினை எழுதி திராவிட மொழிகளில் முனைவர் பட்டமும், இந்திய - ஐரோப்பிய அல்லது இந்தோ ஆரிய மொழிகளில் முதுகலைப்பட்டமும் பெற்றார். முப்பத்துமூன்று மொழிகளைப் பயின்று மூதறிஞராக விளங்கிய இவருக்கு, நூற்றுக்கு மேற்பட்ட மொழிகளில் பயிற்சியும் உண்டு என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பல பல்கலைக்கழகங்களினால், கூட்டாக நிறைவேற்றமுடியாத பணிகளைத் தனியொரு மானிடராக இவர் ஈட்டிய வெற்றி வரலாற்றில் இடம்பெறும் நிகழ்ச்சியாகும். இத்தகுதிகள் இவர் பெற்றிருந்ததனால், சென்னை பல்கலைக்கழகத்தில் தேர்வாளராக விளங்கினார். அத்தோடு சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட அகராதியில் சில தவறுகளைக் கண்ட இவர் அவற்றைத் திருத்தவும் செய்தார்.

### பல்துறை அறிஞர்

தாவீது அடிகள் பன்மொழி அறிஞர் மட்டுமல்ல, பல்துறை அறிஞருமாவார். "ஓம் முருகா" எனும் இலக்கண அகராதியின் சுருககத்தை ஆங்கில விளக்கத்தோடு தந்துள்ளார்.

### யாழ்.நூலகத் தீயிடலும் அதிர்ச்சியில் அடிகளார் மறைவும்

இவ்விதம் ஒப்பற்ற புகழோடு சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி தந்த நம் தாவீது அடிகள், தென கிழக்கு ஆசியாவின் தலைசிறந்த யாழ்.நூலகம் சிங்கள வெறியர்களால் 01.06.1981 இரவு தீக்கிரையாக்கப்பட்டதை, புனித பத்திரிசியாா கல்லூரியில் மேல்மாடி அறையில் இருந்து கண்ணுற்றபோது - கதிகலங்கி, அதிர்ச்சிக்கு ஆளாகி தனது

**மா.க.ஈழவேந்தன்**

74 ஆவது அகவையில் 02.06.1981 எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்தி மீளாவுலகு சென்றார்.

---

# நாடாளுமன்ற உறுப்பினரின் ஆயுதங்களை மீளப்பெற அரசு நடவடிக்கை எடுக்கிறது!

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்ட ஆயுதங்களை மீளப்பெறுவதற்கு, அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பித்தவுடன், உடன் நடவடிக்கை எடுக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட இந்த ஆயுதங்களின் பாவனை பற்றி - சில பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்ததால், ஆயுதங்களைக் களைவதற்கு பிரதமர் தீர்மானித்துள்ளார் என அறியவருகிறது.

இத்திட்டத்தை நடைமுறைப் படுத்த, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஒரு பிரதிநிதி உட்பட 7 பேர் கொண்ட குழுவை நியமிப்பதற்கு பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

# ஆங்கில தின போட்டி திகதிகள் அறிவிப்பு!

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலை மட்ட ஆங்கில தினப் போட்டிகள், எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

பாடசாலை மட்டப் போட்டிகளைத் தொடர்ந்து கோட்டமட்டப் போட்டிகள் எதிர்வரும் 20 ஆம் திகதியும், வலய மட்டப் போட்டிகள் அடுத்தமாதம் 4 ஆம் திகதியும், மாவட்டமட்டப் போட்டிகள் அடுத்த மாதம் 20 ஆம் திகதியும் மாகாண மட்டப் போட்டிகள் செம்பரெம்பர் மாதம் 20, 27 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

மாகாண மட்ட பரிசளிப்பு விழா, செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி இடம்பெறும் என்று, வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

(58)

# தென்மராட்சியில் மீட்ட வெடிபொருட்கள் அழிப்பு

தென்மராட்சிப் பிரதேசத்தின் பல பகுதிகளிலும் இருந்து - மீட்கப்பட்ட ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் நேற்றுமுன்தினம் அழிக்கப்பட்டன.

மேற்படி பகுதியிலிருந்து, படையினர் மற்றும் பொலிஸாரால் மீட்கப்பட்ட மேற்படி வெடிபொருட்கள் - சாவகச்சேரி நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

மேற்படி பொருட்களை அழிக்கும்படி - நீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்தே அவை அழிக்கப்பட்டன.

தனங்களப்புப் பகுதியில் வைத்து சாவகச்சேரி மாவட்ட நீதிவான் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் இராணுவப் பொறியியற் பகுதியினரால் இவை அழிக்கப்பட்டன.

# ரயர் தொழிற்சாலை ஊழியர்கள் விஷவாயுக் கசிவினால் பாதிப்பு!

கம்பஹா - உக்கல்கொட ரயர் உற்பத்தித் தொழிற்சாலையில் பணியாற்றும் 55 ஊழியர்கள், விஷ இரசாயனப் பொருள் கசிவினால் சுகவீனமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதையடுத்து, தொழிற்சாலை மூடப்பட்டது.

நேற்றுமுன்தினம் காலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட 55 ஊழியர்களில், 11 பேர் சிகிச்சை பெற்று வெளியேறினர். இவர்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்பட்டதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

மூச்சுத்தடை ஏற்பட்ட ஊழியர்களுக்கு செயற்கைச் சுவாசம் அளிக்கப்பட்டது. சைக்கிள் ரயர்களைத் தயாரித்து வரும் இந்தத் தொழிற்சாலையில் 264 பேர் பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# "கலா தரிசனம்" வெளியீட்டு விழா

"கலா தரிசனம்" நூல் வெளியீட்டு விழாவும், நூலகத் திறப்பு விழாவும் நேற்றுக்காலை 10 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம், பேராதனை பல்கலைக்கழங்களின் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நிகழ்ந்த இவ்வைபவத்தில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸும், கௌரவவிருந்தினராக புவியியற்துறை தலைவர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளையும், சிறப்பு விருந்தினராக மாவட்ட நீதிபதி விக்னராஜாவும் கலந்துகொண்டனர்.

நூல் வெளியீட்டுரையை கலாநிதி திருநாவுக்கரசும், ஆய்வுரையை கலாநிதி விசாகரூபனும் நிகழ்த்தினர். இந்நிகழ்வில் ஏராளமான மாணவர்கள் கலந்துகொண்டனர். (ரா)

# முன்னாள் பிரதமருக்கு வீடு, கார் வசதிகள்!

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவுக்கு - வீடு, கார் உட்படப் பல வசதிகள் செய்து கொடுப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் அமைச்சரவைக்கு இந்த யோசனை முன்வைக்கப்பட்டது. இதற்கான நிதி, 2004 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கையில் மீண்டும் குதிரைப் பந்தயம்!

## அனுமதி வழங்க அரசு முடிவு

இலங்கையில் மீண்டும் குதிரைப் பந்தயத்தை ஆரம்பிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

1961 ஆம் ஆண்டில் அரசாங்கம் குதிரைப் பந்தயங்களைத் தடைசெய்தது. மீண்டும் குதிரைப்பந்தயங்களைச் சட்டபூர்வமாக அனுமதிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

உல்லாசப் பயணத்துறையை ஊக்குவிக்கும் வகையிலும், தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கும் வகையிலுமே, குதிரைப் பந்தயங்களை நடத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

குதிரைப்பந்தயங்களை நடத்துவதற்கு கொழும்பை அண்டிய பகுதியில் பொருத்தமான இடம் தேடப்படுவதாகவும், நுவரெலியாவில் ஏற்கனவே உள்ள குதிரைப் பந்தயத் திடலை புனரமைக்கும் யோசனையும் அரசாங்கத்திடம் இருப்பதாகவும் தெரியவருகின்றது.

# கண்டெடுத்த அடையாள அட்டைகள் கொடிகாமம் பொலிஸாரிடம் கையளிப்பு

(கொடிகாமம்)

பல்வேறு இடங்களில் கண்டெடுக்கப்பட்ட தேசிய, விசேட அடையாள அட்டைகள் - கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் கொடிகாமம் பொலிஸ் நிலையத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறு, பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

வே.இலட்சுமிப்பிள்ளை (வரணி), இ.சிதம்பரநாதன் (விடத்தற்பளை), மு.நடராசா (மீசாலை), நா.நாகராசா (நாகர்கோவில் தெற்கு), த.தருமலிங்கம் (மீசாலை வடக்கு), ம.விஜயமோகன் (மந்துவில் மேற்கு), க.செல்வதீபன் (பலாலி கிழக்கு), வி.கந்தையா (மீசாலை வடக்கு), சு.சின்னத்தம்பி (கிளிநொச்சி) ஆகியோரது அடையாள அட்டைகளே, பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜி-8 உச்சிமாநாட்டை எதிர்த்து ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம்

## பிரான்ஸில் பதற்றம் அதிகரித்தது



உலகின் பாரிய கைத்தொழில் நாடுகளின் உயர் தலைவர்கள், ஜி - 8 மாநாட்டுக்காக பிரான்ஸில் கூடியுள்ளபோது - அங்கு ஆயிரக்கணக்கான முதலாளித்துவ எதிர்ப்பாளர்கள் பெரும் ஆர்ப்பாட்டங்களில் குதித்துள்ளனர்.

அமெரிக்கா, ஜப்பான், ஜேர்மனி, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, கனடா மற்றும் ரஷ்யாவின் ஜனாதிபதிகளும் 12 அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் தலைவர்களும்- பிரான்ஸின் ஈவியன் நகரில் நடைபெறவுள்ளன. ஜி - 8 மாநாட்டில் பங்குபற்றுகின்றனர்.

இந்த மாநாடு, உலகை இன்னமும் முதலாளித்துவச் சிந்தனைக்குள் கொண்டு வந்துவிடுமென்றும், உலகிலுள்ள வறியவர்கள் மீது ஜி-8 நாடுகள் கவனம் செலுத்தாமல்- தம்மைத்தாம் வளர்த்துக் கொள்வதையே நோக்காகக் கொண்டுள்ளன என்றும் - ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோர் தெரிவிக்கின்றனர்.

ஆர்ப்பாட்டங்களில் நேற்றைய தினமும் ஆயிரக்கணக்கில் குழுமி நின்று, போர் எதிர்ப்பு வாசகங்கள் கொண்ட பதாகைகளைத் தாங்கியபடி - இசைக் கருவிகளையும் முழங்கிவருகின்றனர்.

கடந்த சனியன்று, இதேபோன்று ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீது பிரெஞ்சுப் பொலிஸார் - கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசித்தாக்கி, அவர்களைக் கலைத்தனர்.

இதற்கு முன்னர் - இத்தாலியில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஜி-8 நாடுகளின் உச்சிமாநாடு நடைபெற்றபோதும் - ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் சுட்டதில் ஒருவர் கொல்லப்பட்டதும் - இது உலகளவில் பலத்த எதிர்ப்பைத் தோற்றுவித்ததும் குறிப்பிடத்தக்கது.

# சதாம் கட்சியின் இரகசியக் கூட்டம் பாக்தாத் பொலிஸ் தலைமையகத்தில்

## 15 உயரதிகாரிகள் அமெரிக்கப் படையால் கைது

ஈராக்கியப் பொலிஸாரின் தலைமையகத்துக்குள் நுழைந்த அமெரிக்கப் படைகள் - அங்கு சதாம் ஹீசைனின் பாத் கட்சிக்கு ஆதரவாக இரகசியக் கூட்டங்களை நடத்தியதாக - 15 உயர் பொலிஸ் அதிகாரிகளைக் கைது செய்துள்ளனர்.

ஈராக்கை அமெரிக்கப் படைகள் கைப்பற்றியதன் பின்னர் - அந்நாட்டுப் பொலிஸ் படையில் சேவையாற்றியோரை , அமெரிக்கப் படையினர் அழைத்து மீளவும் கடமையாற்றுமாறு கோரியிருந்தமை தெரிந்ததே.

நேற்று நடந்த இந்தத் திடீர்க் கைது பற்றிக் கருத்துத் தெரிவித்த ஈராக்கிலுள்ள அமெரிக்கப் பொலிஸ் தலைமை அதிகாரி பேனாட் கெரீக், ஐந்து பிரகேடியர் ஜெனரல்கள், ஒரு மெஜர் ஜெனரல் உட்பட பதினைந்து ஈராக்கியப் பொலிஸ் உயர



திகாரிகளே கைதானதாகவும் - இவர்கள் பக்தாத்திலுள்ள பிரதான பொலிஸ் தலைமையகத்தில் வார இறுதியில் கூட்டங்களை நடாத்தியதுடன், சதாம் ஹீசைனின் பாத் கட்சிக்கு ஆதரவாகச் செயற்பட்டதாகவும் கூறினார்.

அமெரிக்கப் படைகளால் பாத் கட்சி தடைசெய்யப்பட்டிருப்பதோடு- இக் கட்சி உறுப்பினர்கள் பலரும் அமெரிக்கப் படைகளால் கைது செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - ஈராக்கியப் பொலிஸ் படையில் பணியாற்றுவோர் எவராயினும் - இனிமேல் பாத் கட்சியுடன் தொடர்புகளை வைத்திருக்கமாட்டோம் என உறுதிகூறும் ஆவணத்தில் கைச்சாத்திட வேண்டும் எனவும் - அமெரிக்கப் படையினர் வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பான ஆவணங்கள், தற்போது ஈராக்கியப் பொலிஸாருக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

# இந்தியா - பாகிஸ்தானிடையே நேரடிப் பேச்சுக்கள் விரைவில்!

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நல்லுறவுநிலை- இரு தரப்பினரையும், நேரடிப் பேச்சுவார்த்தைக்கு இட்டுச் செல்லுமென- இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்தார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற பிராந்தியப் பாதுகாப்பு மாநாட்டில் பேசும் போதே, அவர் இவ்வாறு கூறினார்.

அண்மையில் இந்தியா மேற்கொண்டுவரும் பாகிஸ்தானுடனான அமைதி முயற்சிகள் தொடர்பில் - இஸ்லாமாபாத்திலிருந்தும் சர்வதேசத்திலிருந்தும் நல்ல சமிக்ஞைகளே கிடைத்திருப்பதாகவும்

- இரு தரப்பும் நம்பிக்கையூட்டக் கூடிய விதத்தில் செயற்படத் தொடங்கியிருப்பதாகவும் அவர் கூறினார்.

உலகவலம்

# செய்திப் படங்கள்



ரஷ்யாவின் சென்.பீற்றர்ஸ்பேர்க் நகரில் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும் ரஷ்ய ஜனாதிபதி புட்டினும் சந்தித்தபோது இக்காட்சி பதிவானது. அது சரி என்ன இரகசிய உரையாடல்...?



நேபாளத்திலிருந்து திபெத்தியர்கள் 18 பேரைச் சீனப் பகுதிக்கு நாடு கடத்தும் முயற்சியில் நேபாளப் பொலிஸார் ஈடுபட, தனது உறவினர்களைக் கொண்டு செல்லும் வாகனத்தை மறிக்கிறார் இந்த திபெத்தியப் பெண்.




அமெரிக்காவின் பிரதிப் பாதுகாப்புச் செயலர் போல் வொல்லோவிற்சுக்கு தென்கொரியாவில் இப்படியும் இரு வரவேற்பு. 'யுத்த வெறியனே - கொரியாவிற்கு வராதே 'என்று.

# "நாங்கள் எங்கட பாட்டப் பாக்க வேணும் அவங்கள் தங்கட வீட்டுக்குப் போகட்டும்!"

**மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக, பல்கலைக்கழக மாணவர் அணியொன்று, கடந்த வியாழக்கிழமை சுழிபுரம் மேற்குப் பகுதியில் உள்ள கடற்றொழில் சங்கத்திற்குட்பட்ட அங்கத்தவர்கள் அனைவரையும் சந்தித்து உரையாடியபோது அவர்கள் பின்வருமாறு கூறினர் -**

எங்களுடைய தொழில் கடற்தொழில். கடற்தொழில் என்பது கடற்கரையிலேயே இருந்து கடலைப் பார்த்துக்கொண்டிருந்து நீர் ஓட்டங்கள், காற்றின் திசைகள் என்பவற்றிற்கேற்ப கடலின் நிறமாற்றங்களைக் கொண்டு மீன்கள் இருக்கும் இடங்களைக் கண்டறிந்துதான் மீன்கள் பிடிக்க வேண்டும்.

நாங்கள் கடற்தொழில் முடித்து வந்ததும், கடற்கரையில் மீனுடன் கொண்டுவந்த வலையை இறக்கி வைத்துவிட்டு, கடற்கரையினில் இருந்து கடலைப் பார்த்துப் பார்த்து வலையில் உள்ள மீன்களை வேறாக்குவதுடன், வலைகளை திருத்தும் வேலைகளை பார்த்துக் கொண்டிருப்போம். எங்கட மனைவி பிள்ளைகள் சாப்பாடு தேத்தண்ணியைக் கொண்டுவருவார்கள். நாங்கள் கடற்கரையில் இருந்தே சாப்பிடுவோம்.

ஆனால், இங்க என்ன தம்பி நடக்குது. இண்டைக்கும் நாங்கள் எங்கட கடல்ல மீன் பிடிக்க இராணுவத்திட்ட பாஸ் காட்டித்தானே போகவேண்டிக் கிடக்கிது. கரையில இருந்து 2 கி.மீற்றருக்கு வெளியில இருந்து, கடற்கரையை நோக்கி நாங்கள் போகேக்க, பொக்கெற்றில ஒரு சட்டை ஊசியைக் குத்திக் கொண்டு அவன் தந்த பாஸையும் அந்த ஊசியில குத்திக்கொண்டு கையில ரோச்சு லைட்டும் கொண்டு, வலைகளையும் தோளில காவிக் கொண்டுதான் போக வேண்டிக் கிடக்கு.

பொக்கெற்றில அந்த சட்டை ஊசி இல்லாமல், கையில் பாஸைக் கொண்டு போனாலும், அவன்ற சென்றிப் பொயின்ரில் இருந்து 11/2 கி.மீற்றர் தூரம் திருப்பி அனுப்புவான். போய் ஊசி எடுத்துக் குத்தி அதில பாஸை குத்திக்கொண்டு வா எண்டும், இல்லாட்டிக்குப் பாஸை பறிச்சுப்போட்டு ஒன்பது நாளுக்கு கடலுக்கு விடமாட்டான்.

பொயின்ருக்குள்ள நுழையேக்க இரண்டு பக்கமும் முட்கம்பி அடிக்கப்பட்ட இரண்டடி அகலமுள்ள வேலிக்கு ஊடாக வலைகளைத் தோளில் போட்டுக்கொண்டு போகேக்க - அங்கால, இஞ்சால கொஞ்சம் திரும்பினால் முட்கம்பி கொழுவி இழுக்கும். அவன் அடிக்க வருவான். அப்படிப்போக சிலவேளை கரண்ட்டில்லாட்டி பாஸ் பாக்க வெளிச்சமில்லையெண்டு விடியும் வரையும் நிக்கச்சொல்லுவான்.

அதில பாஸைக் காட்டிப் போட்டு அங்கால போக இன்னொரு சென்ரியில் நாங்கள் கொண்டுபோன பாஸை வாங்கி வைச்சிட்டு, வேற பாஸ் தருவான். அதைக் கொழுவிக் கொண்டு கடலில போகவேனும். அதுவும் மீன் உள்ள இடத்திற்கு போக விடமாட்டான்.

அவன் சொல்லுற இடத்தில்தான் மீன்பிடிக்க விடுவான். அங்கு ஒரு மீனும் இராது. கடலுக்கு இறங்கிறதுக்கு சில இடங்களில்தான் பாதை வைத்திருக்கிறான். ஒரு பாதையால போய் இறங்கிறதுக்கு பாஸ் எடுத்தவை. மற்றத் துறைக்குப போய் கடலில இறங்கேலாது.

தற்செயலாக ஒரு வள்ளம் காணாமற்போனால் இன்னொரு துறைக்கு நாங்கள் தேடிப் போகேலாது. போனால் அடிப்பான். பிடிச்சுக்கொண்டுவாற மீன் முழுவதையும் கொட்டிக்காட்டி அள்ளிவர வேணும். எங்களிட்ட மீன் வாங்க வரும் மீன் வியாபாரிகள் கடற்கரைக்கு சைக்கிலோ, மோட்டார் சைக்கிலோ கொண்டுவர ஏலாது. அவ்வளவு மீனையும் தோளில் சுமந்துகொண்டு ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு மேல நடக்க வேண்டிக் கிடக்குது.

அவனுக்கு சிகரெட் வாங்கிக் கொண்டு போகாட்டி, நீ எல்.ரி.ரி.ஈ இண்ட ஆள் எண்டு வெருட்டுவான். அவன் இருக்கிற இடம் எங்கட வீடுகள். அதை இப்ப உயர் பாதுகாப்பு வலயம் என்கிறான். எங்கட வீட்டுப் பக்கம் போறதுக்கு இங்கலீசில ஒரு கடிதம் எழுதி அதை ரைப்பண்ணி, விதானேற்ற கையெழுத்து, வாங்கி பி.ஆர்.ஓ.விட்ட கையெழுத்து வாங்கிக்கொண்டு போக வேண்டியிருக்கிது.

எங்கட தேவைக்கு பனை தறிக்க கேட்டாலும் விடமாட்டாங்கள். ஆனால், 2 கிழமைக்கு முதல் 30, 35 பனையைத் தறிச்சு சென்றிபோட கொண்டு போட்டான். அந்தப் பனையின்ர அடிக்கு சேறு அள்ளிப் பூசிப்போட்டு வட்டுக்கு மண்ணெண்ணையை ஊத்திக் கொழுத்தினவங்கள்.

இவங்கள் இங்க இருக்கிறதால நாங்கள் நிம்மதியாய் தொழில் செய்யேலாம கிடக்குது. எங்கட வீட்ட போகேலாம கிடக்குது. அவனுக்கு அடிமையாய் இருக்கேலாது. அதனால உவங்கள், எங்கட மண்ணில் இருந்து போகவேணும். அதுக்காக நீங்கள் எங்க கூப்பிடடாலும் நாங்கள் வருவோம். என்ன சொன்னாலும் செய்வோம்.

❋

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஏ-9 வீதிப் போக்குவரத்தை மறித்து முகமாலையில் தொடர் போராட்டம்

## காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோர் தொடர்பாக அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்து, முகமாலையில் - ஏ-9 வீதியில் மறியற் போராட்டம் ஒன்றை நடாத்தப்போவதாக, காணாமற் போனோரின் பாதுகாவலர் சங்கம் அறிவித்துள்ளது.

நேற்றுக்காலை 10 மணிக்கு முனியப்பர் கோவில் முன்றலில் நடைபெற்ற சங்கத்தின் கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது. காணாமற் போனோர் தொடர்பான தகவல்களைப் பெற இச்சங்கம் பல உயர் அரச அதிகாரிகளைச் சந்தித்தும், இதுவரை எவரும் தகுந்த பதில் தரவில்லை.

தமது உறவுகள் தொடர்பான நிலைகுறித்த தகவலை பெற்றுத் தருமாறு, அரச அதிபரிடம் சங்க உறுப்பினர்கள் கோரியபோது, அவர் மரண அத்தாட்சிப் பத்திரத்தை பெற்றுச் செல்லும்படி கூறியுள்ளார்.

தமது கோரிக்கைகளை எவரும் கருத்தில் எடுத்துக் கொள்ளாததைக் கண்டித்தே, மிக விரைவில் ஏ-9 வீதியை மறித்து தொடர் மறியற் போராட்டமொன்றை நடாத்தவுள்ளதாக காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கம் முடிவு எடுத்துள்ளது.

# வரதர் அணியைச் சேர்ந்தவர் மட்டக்களப்பில் சுட்டுக் கொலை

ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி உறுப்பினர் ஒருவர், மட்டக்களப்பில் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று இரவு 8.15 மணிளவில் மட்டக்களப்பு, பூநொச்சிமுனைச் சந்தியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், காளிராஜா ரமணன் (வயது-35) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

நேற்று இரவு சைக்கிளில் சென்று கொண்டிருந்தவேளை, மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இவர் மரணம் அடைந்தார்.

மரணமடைந்த இவரின் சடலம் மட்டக்களப்பு வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவர் - ஏற்கனவே ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி ஆகிய கட்சிகளில் உறுப்பினராக இருந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சம்பவம் தொடர்பாக காத்தான்குடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



கொழும்பில் நேற்று நடைபெற்ற ஆசிய மெய்வல்லுனர் கிறோன்பிறீ நூறு மீற்றர் ஓட்டத்தில் - முதலாவது இடத்தை சுசந்திகா பெற்றார். இப்போட்டியில் இவர் பெற்றுள்ள இரண்டாவது தங்கப் பதக்கம் இதுவாகும்.

## புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

வடக்கு - கிழக்கு மாகாண நீர் விநியோக வசதிகளை புனரமைப்பதற்கென, உலக வங்கி 5 கோடி ரூபாவை வழங்கியுள்ளது. சாவகச்சேரி, கிளிநொச்சி, அம்பாறை, மட்டக்களப்பு, ஆகிய மாவட்டங்கள் இதில் நன்மையடைய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிதியுதவி, வடக்கு -கிழக்கு அவசர புனரமைப்புத் திட்டத்தின் ஊடாக வழங்கப்படவுள்ளது.

## கூட்டமைப்பு...

ரேர்க்கியோ மாநாடு ஜுன் 9 ஆம் திகதி ஆரம்பமாவதற்கு முன்னர் இடைக்கால நிர்வாக அமைப்புத் தொடர்பாக சுமுகமான முடிவொன்றுக்கு வரவேண்டுமென்பதில், பிரதமர் ஆவலாக உள்ளதாக இரா.சம்பந்தன் கூறினார்.

பிரதமருடனான இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு, வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு சென்றிருக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களுக்கும் அவசர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## காணாமற்போன கடற்படைப் படகு கண்டுபிடிப்பு

பருத்தித்துறைக் கடற்பரப்பில், காணாமற்போன கடற்படைப் படகு நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டதாக, பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. மூன்று கடற்படையினருடன் காணாமற்போன கண்ணாடியிழைப் படகு, பருத்தித்துறைக்கு வடகிழக்காக 25 கடல் மைல் தொலைவில் கண்டுபிடிக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.

(முன்னர் வந்த செய்தி உள்ளே)

## புலிகளிடம்...

உருவாக்கப்பட வேண்டுமென்றும் தூதரக அதிகாரிகளால் ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

அதேவேளை, அமைச்சர் சந்திரசேகரனுக்கும் இந்தியத் தூதரகத்திலிருந்து இவ்விடயம் தொடர்பாகப், பேசுவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக என்று எமக்குக் கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# யாழ். நீதிமன்ற வளாகம் அமைப்பது பற்றி கூட்டம்

## இன்று கொழும்பில் நடக்கிறது

யாழ்ப்பாணத்தில் புதிய நீதிமன்ற வளாகம் அமைப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று, இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

நீதிச்சேவை ஆணைக்குழு ஏற்பாடு செய்துள்ள இந்த விசேட கலந்துரையாடலில், பங்குகொள்ள யாழ். மாவட்ட மேல்நீதிமன்ற நீதிபதி வரதராஜா, மாவட்ட நீதிபதி விக்னராஜா ஆகியோர் கொழும்பு சென்றுள்ளனர். இவர்கள், பிரதம நீதியரசர் சரத் என் சில்வா உட்பட நீதிச்சேவை ஆணைக்குழு உறுப்பினர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்துவர்.

முன்னர் நீதிமன்றம் அமைந்திருந்த இடத்தில் புதிய நீதிமன்றக் கட்டடத்தை அமைப்பதற்கான மதிப்பீட்டுப் பணிகள் தற்போது முடிவடைந்துள்ளன.

கட்டடப் பணிகளை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்பது தொடர்பாகவே இன்றைய கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது. இக்கட்டடப் பணிக்கான நிதியுதவியை உலக வங்கி வழங்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது, (ரா)

## ஜப்பானிலி...

சர் மிலிந்த மொறகொட பிரதமருக்கு எடுத்து விளக்கினார்.

நேற்றுக்காலை பிரதமர் நடாத்திய - அமைச்சர்கள், அதிகாரிகள் மட்டத்திலான விசேட கூட்டத்திலும் அமைச்சர் மிலிந்த மொறகொட கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வல்லையில்...

சென்று பார்வையிட்டதுடன் அப்பகுதி மக்களைச் சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

பொதுமக்களால் மேற்கொள்ளப்படவுள்ள, இந்த எதிர்ப்புப் போராட்டத்துக்கு தாம் ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள்- எம்.கே.சிவாஜிலிங்கம், மாவை சேனாதிராஜா ஆகியோர் இன்று இப்போராட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இந்த மறியல் போராட்டம், நேற்றைய தினம் நடைபெற ஏற்பாடாகியிருந்த போதிலும் - இறுதி நேரத்தில் ஒத்தி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(116,9)

# புலிகளுக்கான...

ஏற்கனவே - அரசு சமர்ப்பித்த மாற்றுயோசனை தொடர்பான ஆலோசனைகளை விடுதலைப் புலிகள் நிராகரித்ததையடுத்து, அரசாங்கத்துக்குப் புலிகளால் அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

அரசு ஏற்கனவே சமர்ப்பித்த மாற்றுயோசனை தொடர்பான ஆலோசனையில் தெரிவிக்கப்பட்ட மூன்ற படிநிலைகளிலும் விடுதலைப் புலிகளின் பங்கு எவ்வாறான வகையில் அமைய வேண்டும் என்பது குறித்தும் அங்கு ஆராயப்பட்டது. இவ்விடயத்தில் பல ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன.

இச் சந்திப்பில், விடுதலைப் புலிகளுக்கு விளக்கக் கடிதம் ஒன்றை அனுப்பிவைப்பது தொடர்பாக, மிகவும் விரிவாக ஆராயப்பட்டதுடன், கடித வரைபு பற்றியும் பேசப்பட்டது.

இதன் பின்னரே - புலிகளுக்கான பதில் கடிதம் நேற்றிரவு அனுப்பிவைக்கப்பட்டது.

JAFFNA TECHNICAL INSTITUTE.
JAFFNA, SRI LANKA.
e-mail : jti@sltnet.lk Reg. No 15251 T.P : 0777-292127

A/L 2003 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
இலவச கணனிப் பயிற்சி நெறி

கடந்த 24 வருடங்களாக கணனித்துறையிலும் தொழில்நுட்பத்துறையிலும் பெரும் பங்காற்றி வரும் எமது நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு இலவச கணனிப் பயிற்சியினை வழங்கி வருகிறது அதேபோல் இவ்வாண்டும் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.

Diploma Courses
Diploma in Microsoft Office XP — Duration 5 Months
Diploma in Hardware Engineering — Duration 4 Months
Diploma in Desktop Publishing — Duration 4 Months
Diploma in Computer Programming — Duration 8 Months
Diploma in Windows Application — Duration 6 Months
Diploma in Visual Basic Programming — Duration 4 Months

இவ் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அல்லது சுயமாக தயாரித்து கீழ் காணும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பவும்

பதிவாளர்
J.T.I,
இல:07, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

Certificate Courses
Word XP
Excel XP
Access XP
PowerPoint XP
Corel Draw 11
Page Maker 7
Visual FoxPro 6
HTML
Java
Oracle
Pascal
C/C++

பிரிவு III ஆரம்பம் { 07.06.03 / 10.06.03 } 11.00 மணி

APPLICATION FORM
Full Name : ..............
Address : ..............
Date of Birth : ..............
Course : ..............
Date Signature of Applicant

Head Office:
No: 11/10B, Stanly Road,
Jaffna. Sri Lanka.

Branch:
No: 07, Palaly Road,
Jaffna, Sri Lanka.

(சி-1033)

இறை அனுபவம் பெற மீண்டும் ஓர் அழைப்பு!
இந்தியா போட்டா ஆச்சிரம இறை தியான இல்லத்திலிருந்து வருகை தரும்
அருட் தந்தை - சேவியர் அருள்ராஜ்
அவர்களால் நடத்தப்படும்

இறை தியான வழிபாடுகள்
★ ஜுன் 5,6,7 ஆம் திகதிகளில் காலை 9.30 - 1.00 மணிவரை குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில்.
★ ஜுன் 7 இரவு 7.00 மணிமுதல் அதிகாலைவரை புனிதமாட்டீனார் குருமடத்தில்.

தூய ஆவி திருவிழிப்பு
★ ஜுன் 14, 15 - மாட்டீனார் குருமடத்தில் குறித்துவ மாணவர்களுக்கு.
★ ஜுன் 16,17,18,19 ஆம் திகதிகளில் ஆயர் இல்லத்தில் - குருக்கள், துறவிகள், கன்னியர்களுக்கு
★ ஜுன் 20.21.22 ஆம் திகதிகளில் - நெடுந்தீவில்
★ ஜுன் 23,24,25 கிளி - முல்லை மறைக்கோட்டத்தில்
பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய நவநாள் மறையுரைகளும் மேற்படி குருவானவரால் நிகழ்த்தப்படும்.
இவைதவிர இளைஞர், பெற்றோர், சிறுவர்களுக்கான சிறப்பு நிகழ்வுகள்.

தூய ஆவியின் செயற்பாட்டை அணைக்க வேண்டாம்

ஆயர் இல்லம். (சி-1030) இறைதியான குழுவினர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இணுவில்
## பரராஜசேகரப் பிள்ளையார் கோவில்
# மகோற்சவ சிறப்பிதழ்

### பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் கர்ணபரம்பரை வரலாறும்

இற்றைக்கு 600 ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாண அரசு இருந்த காலத்தில் நல்லூரில் அரசாண்டு இணுவிலில் வாழ்வு தந்த பரராஜசேகர மன்னன் வழிபட்ட ஆலயமாக யாழ்ப்பாண வரலாறு கூறுகிறது.

ஒரு காலத்தில் உன்னத நிலையில் இருந்த புண்ணிய பிரதேசங்கள் சிதைவுற்றும் நிலை குலைந்த போதும் மீண்டும் இன்னொரு காலத்தில் அதே நிலையில் அல்லது விஞ்சி நிற்கும் தானத்தை அடைதல் கால நியதியாகவுள்ளது. இதற்கேற்ப அக்காலத்தில் போதுக்கேயரால் தகர்க்கப்பட்ட பாரிய ஆலயங்கள் மீண்டும் முன்னின்ற நிலையை அடைந்திருப்பதை இன்றும் காணலாம்.

ஈழத்தில் உடுவில் கோவில்ப்பற்றை முற்றுகையிட்ட போத்துக்கேயர் இணுவில் எனும் பூர்வீக கிராமத்து பரராஜ சேகரப் பிள்ளையார் கோவிலையும் நிலகுலையச் செய்துள்ளார்கள். அரச பரம்பரையில் பராமரிக்கப்பட்ட இக்கோயிலை பாதுகாக்க எண்ணி இத் தலத்தை மடம் என்று வாதாடி ஓரளவுக்கு பாதுகாத்தனர் என்று கர்ண பரம்பரைக் கதை கூறுகின்றது. வாயில் பக்கத்தில் மடம் அமைந்துள்ளமையால் இக் கோயிலை மடத்து வாசல் பிள்ளையார் கோவில் என்று தொடர்ந்து வழங்கலாயின.

1475இல் சிங்கை பரராஜசேகரன் அரசனான போது நல்லூரை இராசதானியாக கொண்டு அரசாண்ட அந்த காலத்தில் இணுவில் பிள்ளையார் ஆலயத்தை புதுக்கக் கட்டி வாழ்வு தந்து வழிபட்டானென்று யாழ்ப்பாண வரலாறு கூறுகின்றது.

அதனால் பரராஜசேகரப் பிள்ளையார் என நாமம் சூட்டப்பட்டதாக கூறப்படுகின்றது. இதனை பின்வரும் பாடல் உணர்த்துகின்றது.



'மங்கலம் பொலிவால
சிங்கபுர வலனிடையில்
வைத 'கவி வீரராக
வன்னியாழ் பாடியே
'வாங்கிஅர சாண்டநன்
வளநாட
தற்குவேந்தன்
பொங்குகங் காதரன்
புவனேக வாகுவாம்
பூசுரர்க ளோடுவந்த
புண்ணியன்
பொன்னிநா
டெண்ணுமதி பதியாய
புங்கவர்
வணங்குதிலகன்
சிங்கைஆ ரியச்சக்
கரவர்த்தி தன்மரபில்
ஏகாதசச்
சிரமுறையினான்
திங்கள்நிகர்
கவிகையான்
துங்கமிகு பரராஜ
சேகரத் திகிரிவேந்தன்
பொங்கும் அருள்
தங்கவே பூசித்த
நாயகா புவிபுகழும் மடவாசலில்
புகர்முகக் கடவுள்நின்
மிகுகருணை அடியனேன்
புந்தியில் தங்கஅருளே.

> ஓங்காரப் பிரணவ விநாயகனே – சரணம்
> பாங்காம் இணுவை பரராஜசேகர
>
> பூங்காவனப் பதியாம் புனித இணுவையிலேய்
> வான் கோபுரக் கோவில் வளர்ந்த மறை ஐங்கரனே
>
> சரணம் அடைந்தவரின் சஞ்சலம் தீர்த்து வைப்பாய்
> வரம் அருளி எங்கள் வாழ்வை சிறக்கச் செய்வாய்
> கரமதில் பாசாங்குச தவமுயை ஏந்திடுவாய்
> அரவணைத்தே எம்மை ஆதரித்து அருளுவாய்.
>
> மஹாவித்துவான்
> பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர்.

கடந்த மூன்று தசாப்தங்களில் இந்த ஆலயம் அடைந்த வளர்ச்சியானது அளப்பெரியது. சிற்பக்கலை மிகுந்த வாயிற் கோபுரத்துடன் அருகில் எட்டுத் திக்கும் ஒலி எழுப்பும் நாதமணியும் பிரமாண்டமான திருக்கல்யாண மண்டபமும் இறுதியாக நடந்த கும்பாபிஷேகத்தோடு வர்ண பலகைகளால் அமைக்கப்பட்ட மேற்கூரைகள், சமய, புராண தத்துவங்களை விளக்கும் ஓவியங்கள் கண்கவரும் வர்ண பூச்சுக்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அதன்பின் சமையல் மண்டபம், தீர்த்த மண்டபம் அமைக்கப்பட்டுள்ளன. அன்னதான மண்டபம் அமைக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆலய அமைவிடம்

ஈழவள நாட்டின் யாழ்ப்பாணத்தின் கண் அமைந்துள்ள கிராமங்களில் ஒன்றாகிய இணுவில் கிராமத்தில் வடக்கே புகழ் பெற்ற ஆலயங்களில் இணுவில் கந்தசுவாமி கோவிலையும் கிழக்கே சிவகாமி அம்மன் கோவிலையும் காரைக்கால் சிவனையும் குடி கொண்ட ஊரின் கண்ணே தென்பால் எழுந்தருளி இருக்கும் விநாயகர் ஆலயமாகும்.


அருந்துங்கள் அண்ணா கோப்பி
ANNA INDUSTRY
ANNA INDUSTRY
Inuvil

AYNGARAN VIDEO
AYNGARAN
2466 Eglinton Ave.E,
Scarborough ON M1K5J8
Canada.
infocan@ayngaran.com
Tl-4162665566
Fx- 4162667922

உங்களுக்கு தேவையான மரத்தளபாடங்கள், கோவில் தேர், வாகனங்கள், வீட்டுக்கு தேவையான தரமான கதவுகள், நிலைகள் என்பவற்றை மலிவு விலையில் பெற்றிட நாடவேண்டிய இடம்
ஐயாத்துரை தொழிற்சாலை
கே.கே.எஸ். றோட், இணுவில்

சீமெந்து கூரை ஓடுகள், முகட்டோடுகள் இயந்திரம் மூலம் வடிவமைக்கப்பட்ட கொங்கிறீற் கற்களை பல்வேறு அளவுகளில் பெற்றிட
லோகேஸ் கூரை ஓட்டுத் தொழிற்சாலை
.பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடி, இணுவில்.

தரமான 22 கரட் தங்க நகைகளுக்கும் குறித்த தவணையில் பெற்றிட நாட வேண்டிய இடம்
ஸ்ரீ கண்ணன் ஜூவல் ஹவுஸ்
கே.கே.எஸ். றோட், இணுவில்

கட்டடப்பொருட்கள், சீமெந்துப் பொருட்கள், இரும்பு வகைகள், பைப் வகைகள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
ஸ்ரீ குமரன் காட்வெயார்
T.P.021-2222798
83, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

தானிய வகைகள், மற்றும் மிளகாய் என்பன அரைக்க
மாசிலாமணி அரைக்கும் ஆலை
வன்னியசிங்கம் வீதி, தாவடி.

நவநாகரீக நங்கையர், ஆடவர், குழந்தைகளுக்கு தேவையான ஆடைத் தெரிவிற்கு நாடவேண்டிய இடம்
சாந்தி ரெக்ஸ்ரைல்ஸ்
137, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
T.P.021-2222045
கே.கே. எஸ் றோட், இணுவில்.
T.P.070-212748

உங்கள் சகல விதமான ஐஸ்கட்டி தேவைகளுக்கு
றோயல் ஐஸ் இன்டஸ்ரீஸ்
T.P.0777037808
149, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

ஆடம்பர பொருட்களுக்கு நாடவேண்டிய இடம்
அம்பிகை அழகு மாடம்
கே.கே.எஸ் றோட், இணுவில்.

சகல விதமான ஆடைகள், பட்டுப் புடவைகள், வேஷ்டிகள் மற்றும் அழகுசாதனப் பொருட்களுக்கு
கணேசன் சென்ரர்
T.P.070-212293
தாவடி வடக்கு, கொக்குவில்.

தரமான K.R.S பைக்கற் அரிசி உற்பத்தியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளரும்
இராசம் அரிசி ஆலை
பவர் ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.

# இணுவில் பரராஜசேகரப் பிள்ளை

## சிறப்பிதழ் (

### பார் போற்றும் விநாயகன்

சுந்தர தீவு என வர்ணிக்கப்பட்ட இலங்கையின் வடபால் யாழ்ப்பாண நன்னகரிலே இணுவையம் பதியிலே பராராஜசேகரன் என்னும் மன்னால் ஸ்தாபிக்ப் பெற்ற விளங்குகின்றது இவ்வாலயம்.

"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும் என்பது உதய வாக்கு. இத்தகைய பெருமை பெற்ற விநாயகனுக்கு இந்து சுபானு வருஷ மகோற்சவத்திலே வைகாசி திருவாதிரை நட்சத்திரம் கூடிய நன்நாளிலே ரதோற்சவம் நடைபெறுவது சிறப்புடைத் தன்மை ஆகிறது.

பிரணவப் பொருளாம் ஐங்கரன் ஐந்து முகங்களோடு ஐந்துமுக விநாயனாக அருகில் தம்பியாகிய முருகவேளுடனும் சண்டேஸ்வரருடனும் கூடத் தேரேறி வந்து எல்லா மக்களுக்கும் சகல சௌபாக்கியங்களும், இந்த நாட்டிலே சாந்தியும் சமாதானமும் நிலைபெற துணை புரிய வேண்டுமென. விநாயனை வணங்கி ஆசி கூறுகின்றேன்.

**வை.கோ. அரவிந்தக்குருக்கள்**
**ஆலயகுரு.**

### தேர் ஏறும் ஐங்கரன் பார் போற்றும் பெருமையன்

அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் இரதோற்சவம் நடைபெறும் இன்றைய நாள் இணுவையம்பதி மட்டுமன்றி அகிலமுமே மகிழ்ச்சியில் திளைக்கும் தினமாகும். அழகாக வடிவமைக்கப்பட்ட மூன்று சித்திரத் தேர்களில் வள்ளி தெய்வயானை சமேத முருகப் பெருமானை சண்டேஸ்வரருடனும் ஐங்கரன் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பது கண்கொளாக் காட்சியாகும். இந்த ஆலயம் கிராமப் புறத்தில் அமைந்திருந்தாலும் இதன் பெருமை நாடளாவிய வகையிலும் உலகளாவிய வகையிலும் உணரப்பட்ட காரணத்தினால் மகோற்சவ காலங்களில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் ஆலயத்தை நோக்கி படையெடுப்பது வழக்கம். இன்றைய சமாதான சூழ்நிலையை பயன்படுத்தி உலகின் பல நாடுகளிலும் வாழ்ந்து வரும் எமது மக்கள் மகோற்சவத்திற்கு வருகை தந்திருப்பது பக்தர்களின் எண்ணிக்கையை இவ் வருடம் பன்மடங்காக்கியுள்ளது.

பெருமைமிக்க இவ் விநாயகன் எமது பிரதேச மக்களுக்கு எக்குறையினையும் வைப்பதில்லை. எமது இளைஞர்கள் நம்பிக்கையோடு தும்பிக்கையனை தொழுது உயர் கல்விகள் பெற்று அரச உத்தியோகங்கள் மற்றும் தொழில் முயற்சிகளையும் பெற்றுள்ளனர் என்றால் மிகையாகாது. எமது ஆலயம் இளைஞர்களிடையே கடவுள் பக்தியையும் சமய ஒழுக்க விழுமியங்களையும் வளர்ப்பது வெற்றி கண்டுள்ளது. எமது ஊர் இளைஞர்களைப் போல் ஆலய பக்தி மிக்கவர்கள் எங்கும் இல்லையென்பது நாம் மகிழ்ச்சி கொள்ளாமல் இருக்க முடியாது.

வரலாற்றுப் புகழ்வாய்ந்த இவ்வாலயத்தை சூழ்ந்து இன்று நகரமே உருவாகியிருக்கிறது. பாடசாலை, நூலகம், வைத்தியசாலை, வியாபார கைத்தொழில் நிறுவனங்கள் என நகரப் பண்பை தோற்றுவிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இச் சூழலில் ஆட்சிபுரியும் ஐங்கரன் இன்றைய நாளில் தேரில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள் மழை பொழிவது எம் வாழ்வில் மறக்க முடியாத அருட் காட்சியாகும்.

**கா.தேவராஜா**
**தலைவர், வணிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.**

### துன்பதுயரங்கள் அகல பிரார்த்திப்போமாக.

சைவமும் தமிழும், தமிழ்க்கலைகளும் செழித்து வளரும் இணுவையம்பதியில் வீற்றிருந்து அருள் செய்யும் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயம் அருள் பொலிவும் கலைப் பொலிவும் கொண்ட கலைக்கூடம். தேர்த்திருவிழா அழித்தல் தொழிலின் தத்துவமாகும். நம் அகத்தில் இருக்கும் தீமைகளையும் நம் புறத்தே உள்ள தீமைகளையும் ஒருங்கு சேர அழிப்பதற்காய் பரராஜ சேகரப் பிள்ளையார் பஞ்சமுக விநாயகனான முருகன், சண்டேஸ்வரர் துணை கொண்டு தேரேறிவரும் இந்நன் நாளில் நம் மக்கள் அனுபவித்து வரும் துன்ப துயரங்கள் அகன்று சுபீட்சமான வாழ்வு பெற பிரார்த்திப்போமாக.

**இந்துமதஜோதி தி.மகேஸ்வரன்**
**இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்,**
**யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்**

### இன்று இணுவை பரராஜசேகரனின் தேர்பவனி காட்சி

இணுவை பரராஜசேகரன் ஆலயம் சரித்திரப் புகழ் வாய்ந்தது. பரராஜசேகரனால் கட்டப்பட்டு வழிபடப்பெற்றது. இத்தகு ஆலயத்தில் வினை நீக்கும் விநாயகன் எழுந்தருளி இருந்து பக்தர் குறைதீர்த்து வருகிறான். இதனால் இணுவையம்பதி புனிதம் பெறுகின்றது. சிறுவர்களும் இளைஞர்களும் பக்திவயப்பட்டு இளைமையில் இருந்தே பரராஜசேகரனின் அடித்தொண்டர்களாக விளங்குகின்றனர்.

வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் விநாயகன் இன்று பஞ்சமுக விநாயகனரக தேரில் ஆரோகணித்து அருள் புரிகின்றார். காவடி ஆடிவருவோரும், கற்பூரச்சட்டி ஏந்துவோரும் முன்னே செல்ல இளைஞரும் முதியவரும் வடம் தொட்டிழுக்க பக்தர்வழி பரராஜசேகரன் பவனிவர ரதத்தின் மணிகளும் கொடிகளும் அசைந்துவர ஓங்கார நாதம் ஒலிக்க வேத மந்திரங்களை அந்தணர்கள் ஓதிவர பக்தர்கள் தேவார பாராயணத்தை பண்ணோடு பாடிவர தேரின் பின்னே அங்கப்பிரதட்சணம் செய்வோரும் அடியழிப்போரும் வழிபாடுகளை செய்துவர பரராஜ சேகரன் எல்லோருக்கும் அருள்புரிந்து வரும் காட்சி கண்கொளா காட்சியாகும். இதனை கண்டவர் கேட்டவர் கலந்து கொண்டவர் அனைவருக்கும் பரராஜசேகரனின் அருள் கிடைக்க எம்பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

**இணுவில் பொது நூலகம்**



ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் துணை

### "சமாதானம், சாந்திதரப் பவனி வருகிறான்"

ஊர்கூடி வடம்பிடித்துத் தேரி ழுக்க
உல்லாசப் பவனி வரும் எங்கள் தெய்வம்
சீர்மேவு நல்லிணுவைக் கோயில் வீதி
சீரடியார் பக்திப்பிர வாக வெள்ளம்
கூர்மதியும் அங்குசமும் ஏந்தும் ஐயன்
கணபதியாம் பரராஜ சேக ரனும்
பார் உலகில் சமாதானம் சாந்தி தரப்
பவனியும் வருகிறான் பணிவோம் யாமே!

**மகாவித்துவான் பிரமஸ்ரீ வீரமணி ஐயர்**

பேருன
ஊர்கோலம் பூ
பக்தர்கள்
பார்புகழும் பர
போகிறான்
பூரண கும்பம்
தீபமும் ஏ
பேரார்வமுடன்
பேருளை வே
பண்டி


சகல விதமான பலசரக்குப் பொருட்களுக்கும், கோயிலுக்கு தேவையான பொருட்களுக்கும்
**அருணகிரி ஸ்ரோஸ்**
இணுவில் மானிப்பாய் வீதி, பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடி, இணுவில்.

தரமான தங்க நகைகளை வடிவமைத்து 22 கரட் தரத்துடன் பெற்றுக் கொள்ளவும் போட்டோப் பிரதி செய்யவும்
**விக்னேஸ்வா ஜுவல்லரி**
கே.கே.எஸ் வீதி, இணுவில் ஆஸ்பத்திரியடி.

திருமண அட்டைகள், நினைவுமலர், மற்றும் சகல அச்சுப்பதிப்பிற்கும்
**சிமாட் பிறிண்ட்**
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

சகலவிதமான பலசரக்குப் பொருட்கள், பிஸ்கற் வகைகள், பாடசாலை உபகரணங்களுக்கு
**சாயி ஸ்ரோஸ்**
கே.கே.எஸ் வீதி, ஆஸ்பத்திரியடி, இணுவில்.

தரமான சொக், பழம் உற்பத்தியாளர்கள்
**ரெனிஸ் ஐஸ்கிறீம்**
கே.கே.எஸ் வீதி, உப்புமட பிள்ளையார் கோவிலடி, கோண்டாவில்.

திருமண வைபவங்களுக்கு தேவையான பந்தல், மணவறைகள், கதிரைகள், சிங்கப்பூர் சோடனைகள் என்பவற்றை பெற்றுக் கொள்ள
**ரூபன் பந்தல் சேவை**
இணுவில் மானிப்பாய் வீதி, இணுவில்.

சகலவிதமான கடைச்சல் மின்ஒட்டு வேலைகள், மற்றும் அரைக்கும் ஆலை இயந்திரங்கள் திருத்திப் பெற்றுக்கொள்ள
**மாசிலாமணி கடைச்சல் தொழிற்சாலை**
வன்னியசிங்கம் வீதி, தாவடி.

பாடசாலை உபகரணங்கள், திரைப்படப் பிரதிகள், CD க்கள் மற்றும் பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு
**விஷ்ணு வீடியோ விஷன்**
பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி, இணுவில்.

கவறிங் நகைகள், மேக்கப் செற் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்
**சிவராகினி**
159, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

நவநாகரீக நங்கையர்களுக்கு, ஆடவர்களுக்கும், குழந்தைகளுக்குமான ஆடைத்தெரிவிற்கு
**சிவம் ரெக்ஸ்**
கே.கே.எஸ் றோட், இணுவில்.

ஒட்டு வேலைகளுக்கும், இரும்பு உபகரணங்கள், இரும்பு சம்பந்தமான சகல வேலைகளுக்கும்
**அம்பிகை இரும்புத் தொழிற்சாலை**
கே.கே.எஸ் றோட், இணுவில்.

அனுபவம் திறமை கொண்ட முன்னணி ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்
**K.T.C கல்வி நிறுவனம்**
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

திருமண
பந்தல், ம
சோடனை
பந்
இணு

எலெக்ரோ
கால்
சுப்
T.P. 070

துவிச்சக்
தி
சை
அன்
இணு
அ

# ...ளயார் கோவில் இரதோற்சவ விழா
# (02.06.2003)





## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன அருளாசிச் செய்தி

இணுவையம்பதியில் நீண்டகாலமாக எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் விநாயகப் பெருமான் இன்று தேரேறி அனைவருக்கும் அருள் புரிவது மகிழ்சி தருகிறது. ஆலய விழாக்களில் தேர்த்திருவிழா பல சிறப்புக்களைக் கொண்டது. ஆன்மாக்களின் ஆணவத்தை அடக்கி நல்லருள் புரியும் நிகழ்ச்சியே தேர்த்திருவிழா. மனித வாழ்வை உயர்நிலை அடையச் செய்வது ஆலய வழிபாடாகும். இங்கு நடைபெறும் விழாக்களும் கிரிகைகளும் மனிதனை மனிதநேயத்தோடு வாழ வழிகாட்டுகின்றன. தேர் என்பது பல தத்துவங்களை கொண்டது. மனிதனுடைய உடல் அமைப்பைப் போன்றது தேர். மனிதனை மூன்றாக பிரிக்கின்றோம். தலை, அரை, காலாகப்பிரிக்கின்றோம். அது போல் தேரானது மேல்பாகம், நடுப்பாகம், கீழ்ப்பாகம் எனப் பிரிக்கப்படுகின்றது. தேரில் இறைவனை எழுந்தருளச் செய்வது எமது இதயத்தில் இறைவனை எழுந்தருளச் செய்வதாகும். இத்தேர்த் திருவிழாவை தரிசித்து மனதில் சாந்தியும் சமாதானமும் பெற்று வாழ்வோமாக. விக்கினங்களை தீர்க்கும் விநாகப் பெருமான் அனைவருக்கும் அருள் புரிவாராக.

**என்றும் வேண்டும் இன்ப அன்பு**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமச்சாரிய சுவாமிகள்**

## முமூர்த்திகள் அருள் பாலிக்கும் சித்திர தேர்த்திருவிழா

சுபானு வருஷம் வைகாசி மாதம் 19ம் திகதி திருவாதிரைத் தினத்தில் பரராஜசேகர மன்னனால் ஸ்தாபிக்கப் பெற்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற இவ்வாலயத்தில் விநாயகர், முருகன், சண்டேஸ்வரர் ஆகிய மூவரும் மூன்று சித்திரத்தேரில் ஏறி பவனி வரும் காட்சி அற்புதமானதாகும். இந்த சுபதினத்திலே நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் நிலைக்கவும் மக்கள் எல்லா நலமும் பெற்று வாழவும் பரராஜசேகரனை வேண்டிக் கொள்வோமாக.

**நா.பொன்னுத்துரை**
**ஓய்வுபெற்ற உபஅதிபர்.**

## ...ருளை வேண்டி நின்றார்

...ம் பூண்டது உவகையுடன்
...ர்கள் கூடி விட்டார்கள்
... பரராசசேகரன் பவனிவரப்
...றான் என்றதுமே
...பம் வைத்தார் புதிய தோரணமும்
...ம் ஏற்றி விட்டார்
...டன் போரார்வம் குறையவேண்டுமென்று
... வேண்டி நின்றார்.

...ண்டித[illegible] திருமதி. வை. கணேசபிள்ளை

## அருளாசி

யஜுர்வேத சம்ஹிதை "நமோரதிப்பய:" "ரதேப்யச்சவோநமோ"ரகுபதிப்யச்சவோநமோ" என்று தொடராக பல மந்திரங்கள் தேரைப் பற்றி கூறுகின்றன. சிவபெருமானுக்கு "ரதகாரேப்யர்" என்று பெயர் ரதத்தைச் செய்விப்பவரே உமக்கு வணக்கம் என்று அதன் பொருளாகும். தேர்த்திருவிழா எல்லாப் பத்தர்களாலும் ஆவலோடு எதிர் பார்க்கப்படுகின்ற ஒரு விழாவாகும்.

ரதோற்சவத்தில் யஷ, கின்ன, கிம்புருடி, சித்த வித்தியாதரர்கள் தேவர்களோடு சமூகம் தந்து எம் பெருமான் ரதாரோஹணத் செய்யமுன் அவருக்கு மாலை அணிவித்து ஆசிபெறுகிறார்கள். ரத்தில் சுவாமி ஆரோஹணத் தாரெனில் அவர் வேறு எந்தவித தராதர வேறுபாடுமில்லாமல் பாபி, ரோகி, ஆசளசிகள் முதலிய எல்லோருக்கும் தரிசனம் கொடுக்கிறார். ஆகவே தான் அவருக்கு அவரோகணத்தின் பின் பிராயச்சித்த அபிஷேகம் விதிக்கப்பட்டுள்ளது. இணுவில் பரராஜசேகர விநாயகப் பெருமான் ரதத்தில் ஆரோகணித்து வருவது கண்கொள்ளாகாட்சியாகும். அக்காட்சியை தரிசிப்பவர்கள் அனைவரும் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் பெறுவார்கள் என்பது உறுதி.

**சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்**
**காயத்ரீபீடம், இணுவில்.**

## இன்று இணுவிலில் திவ்ய தரிசனம்

இன்று இணுவிலுக்கோர் பெருவிழா, பத்து நாட்களுக்கு முன்பாகவே இணுவில் கிராமம் திருக்கோலம் பூண்டு விட்டது. வீதியெலாம் விழாக்கோலம் மாவிலை, மகரதோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட பந்தல்கள், நிறைகுடங்கள், மங்களவிளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டன.

மூன்று கண்ணும் மும்மலச்சுவடும் - முடிவு கண்டறிய முப்புரி நூலும் ..... உந்திச்சுழிமேல் உதர பந்தனமும் விளங்கும் தேரில் பஞ்சமுக விநாயகனாக எழுந்தருளி பவனிவருகின்றான். கேட்டவர்க்கு கேட்டபடி வாழ்வு தரும் விநாயகன் தேரில் பவனிவரும் திவ்யதரிசனம் கண்கொள்ளா காட்சியாகும். இத்தகைய அருட்சோதியை பக்தர்கள் ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் வர, அடியவர்கள் அன்பெனும் வடந்தொட்டிழுக்க அன்பர் வழிச்செல்லும் ஐங்கரன் தேர்ப்பவனி கண்டுய்ய வந்தவர்கள் எல்லோருக்கும் பரராஜசேகரன் அருள்பாலிக்க வேண்டுமென பரராஜசேகரன் தாழ் பணிகிறோம்.

**பழைய மாணவர் சங்கம்,**
**இணுவில் இந்துக்கல்லூரி.**


பலசரக்கு பொருட்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
**நாதன் பிறதர்ஸ்**
கே.கே.எஸ் றோட், இணுவில். சுன்னாகம்.

அதிக நேர செய்முறையுடன் கூடிய கணனிக் கல்விக்கும், சிறுவர்களுக்கான கணனி பயிற்சிக்கும்
**கணனிக் கல்லூரி**
கே.கே.எஸ் றோட், இணுவில்.

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான நல்லெண்ணெய் உற்பத்தியாளர்கள்
**மல்ரி ஓயில்**
கே.கே.எஸ் றோட், இணுவில்.

இன்ரநெற் மூலமான சர்வதேச தொடர்புகளுக்கும், சகல விதமான அச்சுப்பதிப்புக்கும்
**ஐங்கரன் டொட்கொம்**
பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி, இணுவில்.

...ருமண வைபவங்களுக்கு தேவையான ...ல், மணவறைகள், கதிரைகள், சிங்கப்பூர் ...னைகள் என்பவற்றை பெற்றுக் கொள்ள
**ஐங்கரன் ...ந்தல் சேவை**
...ணுவில் மானிப்பாய் வீதி, இணுவில்.

இன்ரநெற், பக்ஸ் சேவை, யாழ்-கொழும்பு பஸ் சேவை, விமான பயணச்சீட்டு மற்றும் ஆடம்பரப் பொருட்களுக்கு
**லிங்கம் கொமினிக்கேசன் அன் பரன்சி**
பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடி, இணுவில்.
T.P. 070-212641, 0777-145067

சகல விதமான கட்டடப் பொருட்கள், பைப் வகைகள், என்பவற்றை பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்
**விநாயகர் ஹாட்வெயர்**
கே.கே.எஸ் றோட், இணுவில்.

சகலவிதமான மணிக்கூடுகளை தரமான முறையில் திருத்திப் பெற்றுக்கொள்ளவும், தரமான முறையில் ரபர்சீல், பிளாஸ்ரிக் போட் செய்து கொள்ள
**அம்பி மணிக்கூடு திருத்தகம்**
கே.கே.எஸ் றோட், இணுவில்.

திருமண வைபவங்களுக்கு தேவையான கதிரைகள், மணவறைகள், பந்தல்கள், மால்லகள் என்பவற்றிற்கு நாட வேண்டிய இடம்
**அனுஷா பந்தல் சேவை**
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

...ரானிக் உபகரணங்கள், பைப் வகைகள், ...ல் வகைகள், காலணிகளுக்கு நாட வேண்டிய இடம்
**விதுஷா ...பர் மாக்கட்**
கே.கே.எஸ் றோட், ...0-2[illegible]2216 இணுவில்.

தரமான பலசரக்கு பொருட்களை மலிவாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
**லிங்கம் ஸ்ரோஸ்**
கே.கே.எஸ் றோட், ஆஸ்பத்திரியடி, இணுவில்.

இன்ரநெற் மூலமான தொலைத் தொடர்பு சேவை, பக்ஸ் சேவைக்கும், போட்டோ பிரதிகளுக்கும் மற்றும் KIT காட் பெற்றுக் கொள்ள
**கணபதி கொமினிக்கேசன்**
இணுவில் மானிப்பாய் வீதி, இணுவில்.
T.P. 070-212644, 021-2225311

யாழ் - கொழும்பு சொகுசு பஸ் சேவை, வைபவங்களுக்கு தேவையான வாகனத் தேவைகளுக்கு
**K.S TOURS & TRAVELS**
41, அன்ரர்சன் றோட், நீர்கொழும்பு. இணுவில் தெற்கு, இணுவில்.
T.P. 031-38607

சகல விதமான சிற்றுண்டித் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்
**விநாயகர் தேனீர்சாலை**
பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி, இணுவில்.

...க்கர வண்டி உதிரிப்பாகங்கள், ...திருத்த வேலைகளுக்கும்
**ஸ்ரீராம் ...க்கிள் வேக்ஸ் ...வெயிற் கிளப்**
...ணுவில் மானிப்பாய் வீதி, ...ரசடிச்சந்தி, இணுவில்

22 கரட் தங்க நகைகளை குறித்த தவணையில் ஓடர் செய்து பெற்றுக்கொள்ள
**பிரம்யா நகை மாடம்**
அரசடிச்சந்தி, மானிப்பாய்.
T.P. 021-2223600

மின்னிணைப்பு வேலைகள், வைண்டிங், மற்றும் மின்னிணைப்பு உபகரணங்கள் திருத்துனரும், ஒப்பந்தகாரரும்
**லிங்கம் எலக்றிக்கஸ்**
கே.கே.எஸ் றோட், கோண்டாவில்.

கட்டடப் பொருட்கள் மின்சார உபகரணங்கள், செல் காஸ், பைப் வகைள் என்பவற்றிற்கு நாடவேண்டிய இடம்
**சிவன் ஸ்ரோஸ்**
கே.கே.எஸ் றோட், உப்புமடம்.

பலசரக்கு பொருட்கலள மலிவான விலையில் பெற்றுக் கொள்ளவும், வைபவங்களுக்கு தேவையான வாகன வசதிகளுக்கும்
**கிருபா ஸ்ரோஸ்**
சிங்க கலட்டி வீதி, இணுவில்

# இணுவில்
# பரராஜசேகரப் பிள்ளையார் கோவில்
# மகோற்சவ சிறப்பிதழ்



கவலைகள் கலைந்தோட
கணபதியிடம் வாருங்கள்
காரியங்கள் கைகூட
அவன் காலடியில்
பணியுங்கள்

நம்பிக்கை உள்ளத்தில்
உண்டாயின் என்றும்-
தும்பிக்கை நிற்கும் துணை

சென்ற வருட மகோற்சவத்தின் போது புதிதாக அமைக்கப்பட்ட தீர்த்த மண்டபத்தில் தீர்த்த உற்வவத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படம்

சிறப்பு மலராக்கம்
பா. சுபாஸ்கரன்

## சுபானு வருஷ விசேட தினங்கள்

### வைகாசி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 18 | (01.06.2003) | ஞாயிறு | சப்பறத்திருவிழா |
| 19 | (02.06.2003) | திங்கள் | தேர்த்திருவிழா |
| 20 | (03.06.2003) | செவ்வாய் | தீர்த்தத்திருவிழா |
| 21 | (04.06.2003) | புதன் | பூங்காவனத் திருவிழா |
| 22 | (05.06.2003) | வியாழன் | பிராயச்சித்த அபிஷேகம், உற்சவம் |
| 23 | (06.06.2003) | வெள்ளி | தேரடிப் பொங்கல் |
| 29 | (12.06.2003) | வியாழன் | பிரதோஷ விரதம், விசாக உற்சவம் |

### ஆனி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 01 | (15.06.2003) | ஞாயிறு | சங்கிராந்தி அபிஷேகம் |
| 03 | (17.06.2003) | செவ்வாய் | சங்கடஹர சதுர்த்தி உற்சவம் |
| 12 | (26.06.2003) | வியாழன் | கார்த்திகை உற்சவம் |
| 13 | (27.06.2003) | வெள்ளி | பிரதோஷ உற்சவம் |
| 19 | (03.07.2003) | வியாழன் | சதுர்த்தி உற்சவம் |
| 20 | (04.07.2003) | வெள்ளி | மாணிக்கவாசகர் குருபூஜை |
| 21 | (05.07.2003) | சனி | இரவு நடேசர் அபிஷேகம் |
| 22 | (06.07.2003) | ஞாயிறு | நடேசர் ஆனிஉத்திர தரிசனம் |
| 27 | (11.07.2003) | வெள்ளி | பிரதோஷ உற்சவம் |

### ஆடி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 01 | (17.07.2003) | வியாழன் | சங்கிராந்தி அபிஷேகம், சங்கடஹர சதுர்த்தி உற்சவம் |
| 07 | (23.07.2003) | புதன் | கார்த்திகை உற்சவம் |
| 10 | (26.07.2003) | சனி | பிரதோஷ உற்சவம் |
| 16 | (01.08.2003) | வெள்ளி | சதுர்த்தி உற்சவம், ஆடிப்பூர உற்சவம் |
| 20 | (05.08.2003) | செவ்வாய் | சுந்தரமூர்த்தி நாயனார் குருபூஜை |
| 24 | (09.08.2003) | சனி | பிரதோஷ உற்சவம் |
| 26 | (11.08.2003) | திங்கள் | தீபபூஜை |
| 30 | (15.08.2003) | வெள்ளி | சங்கடஹர சதுர்த்தி |

### ஆவணி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 01 | (18.08.2003) | திங்கள் | சங்கிராந்தி அபிஷேகம் |
| 03 | (20.08.2003) | புதன் | கார்த்திகை உற்சவம் |
| 08 | (25.08.2003) | திங்கள் | பிரதோஷ உற்சவம் |
| 14 | (31.08.2003) | ஞாயிறு | சதுர்த்தி தேர்த்திருவிழா |
| 15 | (01.09.2003) | திங்கள் | பிராயச்சித்த அபிஷேகம் உற்சவம் |
| 19 | (05.09.2003) | வெள்ளி | ஆவணி மூலம் |
| 22 | (08.09.2003) | திங்கள் | பிரதோஷ உற்சவம், ஓணம் உற்சவம் |
| 23 | (09.09.2003) | செவ்வாய் | நடேசர் அபிஷேகம் |
| 28 | (14.09.2003) | ஞாயிறு | சங்கடஹர சதுர்த்தி உற்சவம் |
| 30 | (16.09.2003) | செவ்வாய் | கார்த்திகை உற்சவம் |

### புரட்டாதி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 01 | (18.09.2003) | வியாழன் | சங்கிராந்தி அபிஷேகம் |
| 06 | (23.09.2003) | செவ்வாய் | பிரதோஷ உற்சவம் |
| 09 | (26.09.2003) | வெள்ளி | நவராத்திரி விரதாரம்பம் |
| 12 | (29.09.2003) | திங்கள் | சதுர்த்தி உற்சவம் |
| 18 | (05.10.2003) | ஞாயிறு | விஜயதசமி, கேதார கௌரி விரதாரம்பம் |
| 20 | (07.10.2003) | செவ்வாய் | பிரதோஷம் |
| 21 | (08.10.2003) | புதன் | நடேசர் அபிஷேகம் |
| 26 | (13.10.2003) | திங்கள் | கார்த்திகை உற்சவம் |
| 27 | (14.10.2003) | செவ்வாய் | சங்கடஹர சதுர்த்தி |

### ஐப்பசி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 01 | (18.10.2003) | சனி | சங்கிராந்தி அபிஷேகம் |
| 06 | (23.10.2003) | வியாழன் | பிரதோஷ உற்சவம் |
| 07 | (24.10.2003) | வெள்ளி | தீபாவளி |
| 08. | (25.10.2003) | சனி | கேதாரகௌரி விரதம் |
| 09 | (26.10.2003) | ஞாயிறு | ஸ்கந்த ஷஸ்டி விரதாரம்பம் |
| 11 | (28.10.2003) | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| 13 | (30.10.2003) | வியாழன் | ஸ்கந்த ஷஸ்டி விரதம் |
| 14 | (31.10.2003) | வெள்ளி | திருக்கல்யாணம் |
| 20 | (06.11.2003) | வியாழன் | பிரதோஷ உற்சவம் |
| 23 | (07.11.2003) | வெள்ளி | கார்த்திகை உற்சவம் |
| 27 | (13.11.2003) | வியாழன் | சங்கடஹர சதுர்த்தி உற்சவம் |

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பகல் 12.00 மணிக்கு அபிஷேக உற்சவம் நடைபெறும்.

### கார்த்திகை மாதம்

| | | | |
|---|---|---|---|
| 01 | (17.11.2003) | திங்கள் | சங்கிராந்தி அபிஷேகம் |
| 05 | (21.11.2003) | வெள்ளி | பிரதோஷ உற்சவம் |
| 11 | (27.11.2003) | வியாழன் | சதுர்த்தி உற்சவம் |
| 20 | (06.12.2003) | சனி | பிரதோஷ உற்சவம் |
| 21 | (07.12.2003) | ஞாயிறு | திருக்கார்த்திகை உற்சவம் |
| 23 | (09.12.2003) | செவ்வாய் | விநாயக விரதாரம்பம் |
| 26 | (12.12.2003) | வெள்ளி | சங்கடஹர சதுர்த்தி |

ஒவ்வொரு திங்கட்கிழமைகளில் பகல் 12.00 மணிக்கு அபிஷேக உற்சவம் நடைபெறும்.

### மார்கழி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 01 | (16.12.2003) | செவ்வாய் | சங்கிராந்தி அபிஷேகம் |
| 06 | (21.12.2003) | ஞாயிறு | பிரதோஷ உற்சவம் |
| 11 | (26.12.2003) | வெள்ளி | சதுர்த்தி உற்சவம் |
| 13 | (28.12.2003) | ஞாயிறு | விநாயக சதுர்த்தி விரதம், கஜமுக சங்காரம், உதயத்திற்கு முன் திருவெம்பாவை ஆரம்பம் |
| 19 | (03.01.2004) | சனி | கார்த்திகை உற்சவம், சுவர்க்கவாயில் ஏகாதசி |
| 20 | (04.01.2004) | ஞாயிறு | பிரதோஷ உற்சவம் |
| 22 | (06.01.2004) | செவ்வாய் | இரவு நடேசர் அபிஷேகம் |
| 23 | (07.01.2004) | புதன் | உதயம் நடேசர் ஆர்த்திரா தரிசனம் |
| 27 | (11.01.2004) | ஞாயிறு | சங்கடஹர சதுர்த்தி உற்சவம் |

### தை மாதம்

| | | | |
|---|---|---|---|
| 01 | (15.01.2004) | வியாழன் | தைப்பொங்கல் |
| 05 | (19.01.2004) | திங்கள் | பிரதோஷ விரதம் |
| 07 | (21.01.2004) | புதன் | அம்மன் அபிஷேக உற்சவம், அபிராமிப்பட்டர் தினம் |
| 11 | (25.01.2004) | ஞாயிறு | சதுர்த்தி, மஹா கும்பாபிஷேக தினம், அபிஷேகம் உற்சவம் பஞ்சமுகார்ச்சனை ஆரம்பம் (கந்தபுராண படனாரம்பம்) |
| 16 | (30.01.2004) | வெள்ளி | கார்த்திகை உற்சவம் |
| 20 | (03.02.2004) | செவ்வாய் | பிரதோஷ உற்சவம் |
| 22 | (05.02.2004) | வியாழன் | தைப்பூச திருமஞ்ச திருவிழா |
| 26 | (09.02.2004) | திங்கள் | சங்கடஹர சதுர்த்தி உற்சவம் |

### மாசி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 01 | (13.02.2004) | வெள்ளி | சங்கிராந்தி அபிஷேகம் |
| 06 | (18.02.2004) | புதன் | பிரதோஷ உற்சவம், மஹா சிவராத்திரி |
| 12 | (24.02.2004) | செவ்வாய் | சதுர்த்தி உற்சவம் |
| 15 | (27.02.2004) | வெள்ளி | கார்த்திகை உற்சவம் |
| 21 | (04.03.2004) | வியாழன் | பிரதோஷ உற்சவம் |
| 22 | (05.03.2004) | வெள்ளி | மாசி மகம், நடேசர் அபிஷேகம் |
| 27 | (10.03.2004) | புதன் | சங்கடஹர சதுர்த்தி உற்சவம் |

### பங்குனி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 01 | (14.03.2004) | ஞாயிறு | சங்கிராந்தி அபிஷேகம் |
| 05 | (18.03.2004) | வியாழன் | பிரதோஷ உற்சவம் |
| 06 | (19.03.2004) | வெள்ளி | பஞ்சமுக விநாயக தண்டிகை உற்சவம் |
| 11 | (24.03.2004) | புதன் | சதுர்த்தி உற்சவம் |
| 12 | (25.03.2004) | வியாழன் | கார்த்திகை விரதம் |
| 21 | (03.04.2004) | சனி | பிரதோஷ உற்சவம் |
| 22 | (04.04.2004) | ஞாயிறு | பங்குனி உத்திர அபிஷேக உற்சவம் |
| 26 | (08.04.2004) | வியாழன் | சங்கடஹர சதுர்த்தி உற்சவம் |

ஆடம்பரப் பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
பெசன் ஹவுஸ்
கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
T.P. 021-2222197

கட்டிய வேலைக்கு தேவையான தரமான மண், கற்களை பெற்றிட
ஆஞ்சநேயர் ரான்ஸ் போட்
பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடி, இணுவில்.

ஆடம்பரப் பொருட்களை மலிவானதாகவும் தரமானதாகவும் பெற்றுக்கொள்ள
ஐங்கரன் பான்சி
கே.கே.எஸ் றோட், சுன்னாகம்.

மங்களகரமான நிகழ்சிகளை வீடியோ மூலம் ஒளிப்பதிவு செய்திட
யுனிக் வீடியோ கொம்பிளக்ஸ்
மதன், சிவகாமி அம்மன் கோவிலடி.
காந்தன், பரராஜசேகர பிள்ளையார் கோவிலடி.
T.P. 071-380126, 071-380127

விழாமலர் சிறப்புற வாழ்த்தும்
ஞானேஸ்வரன் அரிசி ஆலை
பரராஜசேகரப் பிள்ளையார் கோவலடி

யாழ் நகரில் முன்னணி ஆசிரியர்களால் கற்பிக்கப்படும் நிறுவனம்
A.T.C கல்வி நிறுவனம்
தாவடி வடக்கு,